

# பாவை என்று சொல்லாதே என்னை!

கவிதைகள்

சந்திரவதனா

# பாவை என்று சொல்லாதே என்னை!

# பாவை என்று சொல்லாதே என்னை!

## சந்திரவதனா

### கவிதைகள்

மனஓசை

*பாவை என்று சொல்லாதே என்னை!*
*(கவிதைகள்)*
*ஆசிரியர்: சந்திரவதனா செல்வகுமாரன்*

*வெளியீடு: மனஓசை, யேர்மனி*
*முதலாம் பதிப்பு: டிசம்பர் 2024*
*இரண்டாம் பதிப்பு: ஜூன் 2025*
*© 2025 மனஓசை, யேர்மனி*
*நூல் வடிவமைப்பு: சந்திரவதனா*
*மனஓசை வெளியீடு: 16*

*Paavai Entru Sollathe Ennai!*
*(Poems)*
*Language: Tamil*
*Author: Chandravathanaa Selvakumaran*
*Published by Manaosai, Germany*
*First Edition: December 2024*
*Second Edition: June 2025*
*© 2025 Manaosai, Germany*
*ISBN: 978-3-9813002-4-6*
*E-Mail: chandra1200@gmail.com*
*Book design: Chandravathanaa*
*Printed in Stuttgart, Germany*

# என்னுரை

*நான் பேனா பிடித்து எழுதத் தொடங்கிய காலத்திலேயே எனது அப்பா எனக்கொரு டயறி வாங்கித் தந்து தினமும் நான் சந்திப்பவைகளையும் எனது எண்ணங்களையும் எழுதச் சொன்னார்.*

*அப்போதிருந்து தினமும் நான் எதையாவது எழுதிக் கொண்டிருந்தாலும், கவிதை எழுத வேண்டுமென்ற ஆசை எனது அண்ணன், கவிஞன் தீட்சண்யனிடம் (பிறேமராஜன் தியாகராஜா) இருந்துதான் எனக்கு வந்தது. எனது அண்ணன் தனது பன்னிரண்டாவது வயதிலேயே கவிதை எழுதி, ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர்களின் பாராட்டுக்களைப்பெற்று ஒரு கவிஞனாக இனம் காணப்பட்டவர். தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் மரபுக்கவிதையாகவோ புதுக்கவிதை யாகவோ நினைத்தவுடன் வடித்து விடும் ஆற்றல் மிக்கவர். (தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் கவிமழை பொழிந்தவர்)*

*அவரது அந்தக் கவிதைகளையும் கவித்திறனையும் காணும் போதெல்லாம் எனக்கும் கவிதை எழுத வேண்டுமென்ற ஆசை பெருகும். அதன் விளைவாக நான் எனது முதற் கவிதையை 1975 இல் எழுதினேன்.*

*அது அண்ணனின் கவிதை போல அமையாவிட்டாலும் அதை நான் 1981இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்கு அனுப்பி வைத்தேன். உடனேயே அது ஒலிபரப்பானது.*

*புகழ்பெற்ற வானொலி அறிவிப்பாளரும், நாடகக் கலைஞருமான அமரர் திருமதி இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் எனது கவிதையைப் பாராட்டி எனக்குப் பெரும் உற்சாகத்தையும் தந்தார். அதுவே என் கவிதையின் ஆரம்பமும் ஆகியது.*

*யேர்மனிக்கு வந்த பின்னர், 09.06.1997இல் ஐபிசி தமிழ் வானொலி உதயமானது. அவ் வானொலியின் பணிப்பாளரான திரு ஏ.சி. தாசீசியஸ் அவர்கள் கவியரங்கம்(பின்னாளில் பிரசவக்களம்) என்றொரு நிகழ்ச்சியை ஆரம்பித்து கவிதைகள் அனுப்பும் படி அறைகூவல் விடுத்தார். நான் மிகுந்த உற்சாகத்துடன் கைவசமிருந்த ஒன்றை 'கவிதை' என்ற பெயரில் அனுப்பி வைத்தேன். அதுவும் உடனேயே ஒலிபரப்பானது. நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவரான கோபு அவர்கள் தான் அதை அழகாகப் படித்தளித்தார்.*

*பிறகென்ன, அவ்வப்போது எதையாவது கிறுக்கிக் கிறுக்கி ஐபிசி தமிழ் வானொலிக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். அவர்களும் நான் அனுப்புபவைகளைக் கவிதைகளாக அங்கீகரித்து ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள்.*

*அப்படி நான் எழுதி 'கவிதை' என்ற பெயரில் ஒலிபரப்பான, பிரசுரமானவைகளிலிருந்து என்னால் சேகரிக்க முடிந்தவைகளை, என்னை உற்சாகப்படுத்தி எழுதத் தூண்டிய, எனது எழுத்துக்களுக்குத் தளம் அமைத்துத் தந்த "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐபிசி தமிழ் வானொலி (அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), எரிமலை சஞ்சிகை, களத்தில் பத்திரிகை, ஈழமுரசு (பாரிஸ்), ஈழநாடு(பாரிஸ்), பெண்கள் சந்திப்பு மலர், சூரியன்(இணைய இதழ்), வார்ப்பு(இணைய இதழ்), பதிவுகள் (இணையஇதழ்), யாழ் இணையம், வளரி..." என்று எல்லோரையும் நன்றியோடு நினைவுகூர்ந்த படி தொகுத்து நூலக்கியுள்ளேன்.*

*இவை, எந்த வரையறைகளுக்குள்ளும் அடங்காதவை. எந்த வரைவிலக்கணங்களுக்கும் உட்படாதவை. எனது உணர்வுகளின் வடிகால்கள்!*

**-சந்திரவதனா**
*chandra1200@gmail.com*

# உள்ளடக்கம்


1. நினைவுகள் ........................................ 09
2. உயிரோடு திரும்புவேனா ........................................ 10
3. கொழும்பு றோட்டில் ........................................ 12
4. சுதந்திரம் ........................................ 15
5. மறத்தமிழ் மகளே ........................................ 18
6. வெளிநாட்டுத் தமிழரே ........................................ 19
7. ஓ... இதுதான் காதலா ........................................ 21
8. இதுவும் காதலா ........................................ 23
9. இலவு காத்த கிளியாக ........................................ 24
10. எம்மவர் மட்டும் எங்கே ........................................ 26
11. ஐபிசி தமிழ் வானொலி 2 வது ஆண்டு ........................................ 28
12. பேருந்துப் பயணத்தில் ........................................ 30
13. நிராகரிப்பு ........................................ 31
14. நினைவிலே ஒரு தீபாவளி ........................................ 32
15. விடுதலை வேண்டி ........................................ 34
16. ஏன் மறந்து போனாய் ........................................ 36
17. தாய்மனமும் சேய்மனமும் ........................................ 37
18. முத்தம் ........................................ 38
19. அப்பா ........................................ 39
20. தொலைக்காதே உன்னை ........................................ 41
21. நாற்குணம் ........................................ 43
22. புற்றுநோய் ........................................ 44
23. நான் ஒரு பெண் ........................................ 45
24. சுகமான நினைவு ........................................ 47
25. பெண்ணே நீ இன்னும் பேதைதானே ........................................ 50
26. நிமலராஜனே ........................................ 51
27. களிக்கும் மனங்களே கசியுங்கள் ........................................ 52
28. வழக்கம் போல் அடுப்படிக்குள் ........................................ 54
29. புயலடித்துச் சாய்ந்த மரம் ........................................ 56
30. காற்றே ........................................ 57
31. குளிர் ........................................ 58
32. உனக்காய் வாழ் ........................................ 59
33. உனதாய் ........................................ 60
34. உனக்கு விடுதலை வேண்டும் ........................................ 61
35. ரணம் ........................................ 62
36. மனநோயாளி ........................................ 63

37. சாதனைகள் பல விதம்........................................64
38. பால்வினை ..........................................................65
39. நீயே ஒரு அழகிய கவிதைதானே......................66
40. உன் பலம் உணர்ந்திடு........................................67
41. அழகு..................................................................68
42. பிறப்புக்கு அர்த்தம் சொன்ன தூய தாயகன் ....70
43. நட்பென்றுதானே நம்பினேன் ...........................71
44. கல்யாணச் சந்தை................................................72
45. மௌனம் ............................................................73
46. காலமிட்ட விலங்கையும் உடை.........................74
47. மனசு சூனிய வெளிக்குள் ..................................75
48. வியப்பு................................................................77
49. தத்துவம்.............................................................78
50. நிபந்தனை ..........................................................79
51. ஏன் இதெல்லாம்..................................................80
52. மனசு தகிக்கிறது .................................................81
53. வாழ்க்கைக் கோட்பாடுகள் ...............................82
54. கண்ணீர்த்துளிகள் ..............................................84
55. பொல்லாத மனம் ...............................................85
56. சொல்லப்படாதவைகள் .......................................86
57. பிரியாவிடை.......................................................87
58. தொடுதல் ............................................................88
59. இணை பிரியாத இளஞ்சோடிகள் .....................89
60. திணிப்பும் பறிப்பும் ...........................................90
61. காகம் வெள்ளை என்கிறார்கள் .........................91
62. பறத்தலுக்கான சுதந்திரம்....................................92
63. புரிந்துணர்வு ஒப்பந்தம்.......................................93
64. மனசு விசித்திரமானது .......................................94
65. நாங்கள் கையாலாகதவர்கள் ............................95
66. அறைந்து சாத்தப்படும் கதவு .............................96
67. துளிகள் ...............................................................97
68. அண்ணா ............................................................99
69. நினைவு நாள் ....................................................101
70. தம்பிமார்.............................................................103
71. பெண்மொழிக்கவிதைகள் - ஆய்வுச்சுருக்கம்....105

# நினைவுகள்

*முற்றத்து நிலாவும்*
*முழு நீள விறாந்தையும்*
*"மூத்தக்கா" என்றழைக்கும்*
*என் அன்புத் தம்பியும்*
*மெத்தென என் மனதில்*
*மிருது நடை போடுகையில்*
*போரிலே என் தம்பி*
*பொருதி விட்ட நினைவு வந்து*
*கோரமாய் எனைத் தாக்கும்!*

*தென்னை இளநீரும்*
*தேன் சுவை மாம்பழமும்*
*சின்ன வார்த்தைகளால்-எனை*
*சீண்டி விடும் அண்ணாவும்*
*சில்லென என் நினைவை*
*சிலிர்க்க வைக்கும் அக்கணத்தில்*
*'ஷெல்' லிலே அவன் கால்கள்*
*சில்லான நினைவு வந்து*
*கொல்லாமல் எனைக் கொல்லும்!*

*நீலக் கடலலையும்*
*நெடிதுயர்ந்த பனை மரமும்*
*பாசமுடன் எனை அணைக்கும்*
*என் நேசமிகு அம்மாவும்*
*ஈர மழை பொழிந்து*
*என் நெஞ்சை நனைக்கையிலே*
*வன்னி மண்ணில் அவள்*
*அகதியான நினைவு வந்து*
*கொடும் புயலாக எனை அலைக்கும்!*

*ஈழநாடு பாரீஸ் (7-13 நவம்பர், 1997)*
*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - நவம்பர், 1997)*

# உயிரோடு திரும்புவேனா..?

*யேர்மனிய மண்விட்டு மேலெழுந்து*
*விண்ணோக்கி முன்னேறும் விமானத்துள்...*
*உயிரோடு திரும்புவேனா - நான்*
*உயிரோடு திரும்புவேனா?*
*அலைமோதும் எண்ணங்கள்*
*நெஞ்சில் சதிராட நான்!*

*கருவோடு உருவாகி*
*உயிரோடு உறவாடும்-என்*
*உதிரத்து உறவுகளை*
*யேர்மனியில் விட்டு வரும் பரிதவிப்பு!*
*அவர்கள் சிறகிழந்து விடுவார்களோ*
*என்ற பதைபதைப்பு!*

*சின்ன வயசிலே*
*சிட்டாகப் பறக்கையிலே*
*தொட்டுப் பார்க்க ஆசைப்பட்ட*
*பட்டு மேகங்களினூடே*
*விமானம் வட்டுமிட்டுப் பறக்கையிலே*
*மேகத்தைத் தொட்டுப் பார்க்கவோ*
*ஒரு மெட்டுப் போடவோ*
*சொட்டுக்கூட ஆசையின்றிய படபடப்பு!*
*உயிரோடு நான் - என்*
*உதிரத்து உறவுகளிடம் திரும்புவேனா*
*என்ற பயத்துடிப்பு!*

*கருக்கொண்ட நாள் முதலாய்*
*கர்ப்பப்பையில் காத்து*
*வெளிவந்த பின்னாலும்*
*அன்புச் சிறகுகளினால் அணைத்த*
*அம்மாவையும்*
*உயிரோடு போராடும்*
*கனமான வேளையிலும்*
*என் முகங்காண ஏங்கி நிற்கும்*

*அப்பாவையும் பார்க்க*
*விழி சிவந்து*
*மனம் கசிந்து*
*பயணிக்கும் என்னுள்ளே படபடப்பு!*
*என் உதிரத்து உறவுகளிடம்*
*உயிரோடு திரும்புவேனா*
*என்ற பரிதவிப்பு!*

*கடல் தாண்டி மலை தாண்டி*
*பனி தாண்டி வெண்முகில் தாண்டி*
*தரையிறங்கும் விமானத்துள் சலசலப்பு!*
*கரை வந்த அலை வந்து*
*மனம் தொட்ட சிலுசிலுப்பு!*
*அங்கோடி இங்கோடி*
*வயிற்றிற்கோர் வழிதேடி*
*மீண்டும் தாயின் இறகுக்குள்*
*ஒழிந்து கொள்ளும் உயிர்த்துடிப்பு!*

*விண்தொட்ட விமானம்*
*என் தாயக*
*மண் தொட்ட போதும்...*
*உயிரோடு திரும்புவேனா - நான்*
*உயிரோடு திரும்புவேனா?*
*அலைமோதும் எண்ணங்கள்*
*நெஞ்சில் சதிராட நான்!*

*-12.12.1997*
*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - 18.01.1998)*

*(இன்று, நினைத்ததும் நாம் தாயகம் சென்று திரும்புகிறோம். அப்படிச் செல்ல முடியாத ஒரு நிலை அன்று இருந்தது. அந்தப் பொழுதில் நான் என் குழந்தைகளை யேர்மனியில் விட்டுவிட்டு போர்முகம் காட்டி நிற்கும் என் தாயகத்தை நோக்கிப் பயணித்த போது..)*

# கொழும்பு றோட்டில்...

*கொழும்பு றோட்டில்*
*கொஞ்சத் தூரந்தான் போயிருப்பேன்!*

*“வீட்டை போன உடனை*
*பொலிஸ்ரிப்போர்ட் எடுக்கப் போகோணும்“*
*மாமாதான் சொன்னார்!*

*வீட்டுக்குப் போனவுடன்*
*குளித்துச் சாப்பிட்டு*
*நாற்பது ரூபா ஓட்டோவுக்குக் கொடுத்து*
*கண்ணாடிகளோ கதவுகளோ இல்லாத*
*அதன் வேகத்தில்*
*தலை கலைந்து உடல் குலுங்கி*
*உண்டதெல்லாம் வெளிவரும் உணர்வுடன்*
*பொலிஸ் ஸ்ரேசன் போனால்*

*"லேற்றாகி விட்டது.*
*சில்வா போய் விட்டார்"*
*சிங்களத்தில் ஒருவன்*
*சிரிக்காமல் தடுத்தான்*
*நரசிம்மராவிடம் பயிற்சி பெற்றானோ..!*

*சிங்களத்தில் மாமா சிரித்துக் கதைத்து*
*என் யேர்மனியப் பாஸ்போர்ட் காட்ட*
*மெல்ல அவன் முகமிளகி*
*துப்பாக்கியை விலத்தி*
*உள்ளே போக வழி விட்டான்!*

*தென்னைகள் குடையாக விரிந்திருக்க*
*குரோட்டன்கள் அழகாய் பரந்திருக்க*
*கூரிய கண்கள் பல*
*என்னையே உற்று நோக்க*
*தூக்கிய துப்பாக்கிகள் மட்டும்*
*என் கண்களுக்குத் தெரிய*

*படபடக்கும் நெஞ்சுடன் படியேறி*
*பல் இளித்து*
*பத்திரங்களை நிரப்பி*
*பவ்வியமாய் சிங்களப் பெண்களிடம் கொடுத்து*
*வெளி வருகையில்*

*"இண்டைக்கு வவுனியாக்குப் போகேலாது*
*நாளைக்குத்தான் பொலிஸ்ரிப்போர்ட் கிடைக்கும்"*
*மாமாதான் சொன்னார்!*

*ஆளுடன் ஆளுரச*
*அவசர நடைபோடும் வெள்ளவத்தை றோட்டில்*
*இரண்டு இடத்தில் செக்கிங்!*

*பாஸ்போர்ட் காட்டி*
*Flight Time சொல்லி*
*வீடு திரும்புகையில்*
*யேர்மனியிலும் இல்லாமல்*
*வவுனியாவிலும் இல்லாமல்*
*வீணான நாளை எண்ணி*
*மனசுக்குள் சலிப்பு!*

*இரவும் வந்தது...*

*யேர்மனிக்கும் வவுனியாவுக்குமாய்*
*மனசு அலைய*
*தூக்கம் என்னை விட்டு*
*தூர விலகி நிற்க*
*கட்டிலில் புரள்கையில்*
*'டொக்.. டொக்.. டொக்...'*
*யன்னலினூடு இராணுவத்தலைகள்..!*

*நெஞ்சுக்குள் பந்து உருள*
*"ஆமி... ஆமி..." என்று*
*மாமி கிசுகிசுக்க*
*இரவின் நிசப்தம்*
*இராணுவத்தால் குலைக்கப்பட்டு*

*வேண்டாமலே ஒரு சிவராத்திரி*
*வீடு தேடி வந்திருந்தது!*

*மீண்டும்*
*பாஸ்போர்ட் காட்டி*
*Flight Time சொல்லி...*

*சோதனை என்ற பெயரில்*
*வீடு குடையப் படுகையில்*
*குளிர்ந்த நிலவிலே*
*இரவுடையுடன் நிறுத்தப்பட்டு*
*அப்பாடா...*
*கூச வைத்தன இராணுவக் கண்கள்*
*மனம் குலுங்கி அழுதது*
*என் தேசப்பெண்களை எண்ணி...*

*-03.12.1997*
*ஐபிசி தமிழ் வானொலி (கவிதைக்களம் - 06.09.1998)*
*ஐபிசி தமிழ் வானொலி (காற்றலை - 05.05.2000)*

# சுதந்திரம்

*நாற்பத்தெட்டில்
மாசி நான்காம் நாளில்
நமக்குச் சுதந்திரமாம்!*

*படித்து
பரீட்சை எழுதி
புள்ளிகளும் பெற்றோம்!*

*ஐம்பத்தெட்டில் தமிழன்
அடிபட்டானாம்!
கண்களில் அனல் கக்க
அப்பா கதையாகச் சொன்னார்!*

*குருவி போல் சேர்த்த பணத்தில்
குதூகலமாய் தொட்டில் வாங்கி
மகப் பேற்றுக்காய்
வடக்கே சென்ற அம்மாவின்
வரவுக்காய் காத்திருக்கையில்...*

*அக்கினியில் அத்தொட்டில்
கருகுவதைப் பார்த்தாராம்!
மலவாளி தலையில் கவிட்டு
மாமா நடப்பதைப் பார்த்தாராம்!
ரயரோடு ஒரு தமிழன்
எரிவதைப் பார்த்தாராம்!
இன்னும் அவலங்கள்...
எத்தனையோ பார்த்தாராம்!*

*இவையெல்லாம் கதையாக
கொடுங் கதையாக
எனக்குள்ளே பதிந்தாலும்
போன கதைதானே..!
புழுங்காமல் இருந்தேன்*

*சுதந்திரம் அது என்ன?*
*புரியாமல் வாழ்ந்தேன்!*

*எண்பத்தி மூன்று ஆடியின்*
*வெலிக்கடை ஓலத்தில்*
*சுதந்திரம்*
*அது வேண்டும்!*
*எமக்கென*
*நிரந்தர இடம் வேண்டும்!*
*புரிந்தாலும்...*
*சுயநலம் அது கொண்டு*
*வெளிநாடு ஓடி வந்தேன்!*

*அந்நியன் மண்ணிலே*
*அகதி முகாமிலே*
*வயிற்றுக்காய்...*
*கன்ரீனில் வரிசையிலும்*
*காசுக்காய்...*
*சோசலிலே கதிரைகளிலும்*
*மானத்தை விற்று*
*வேலைக்காய்...*
*கால் கடுக்க வீதிகளிலும்*
*வெள்ளையனின் வாசல்களிலும்*
*வெட்கத்தை விசிறி*
*என்னத்தைக் கண்டோம்!*
*சுதந்திரம் அது என்ன?*
*மறந்து போச்சு எமக்கு!*

*வேலை கிடைத்தும்*
*வீடு கிடைத்தும்*
*விசா கிடைத்தும்*
*ஈடு கொடுக்க முடியவில்லை*
*அந்நிய தேச வாழ்க்கைக்கு!*

*ஊரின் அவலங்கள்*
*உலுக்கும் சேதிகளாய்*
*நெஞ்சைக் குடைகையிலும்*

*வேறு வழியின்றி*
*ஓடிச் செல்கின்றோம்*
*அந்நியனின் கீழ்*
*அடிமையாய் வேலை செய்ய!*

*சுமைகளாய் சோகங்கள்!*
*தொடர்களாய் வேலைகள்!*
*சுதந்திரம் அது வாங்க!*
*ஏணி எங்கே?*
*தேடுகின்றோம்!*

*-04.02.1998*
*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - பெப்ரவரி, 1998)*
*சூரியன்.கொம் (24.12.2001)*

# *மறத்தமிழ் மகளே!*

*பெண்ணொன்று பிறந்து விட்டால்*
*பொன் பொருள் சேர்க்க வேண்டும்*
*என்றெண்ணும் நிலை மாற்றி*
*தாய் மண் காக்கத் துணிந்திட்ட*
*மறத்தமிழ் மகளே!*

*கரங்களில் துப்பாக்கி*
*கழுத்தினில் சயனைட் குப்பியுடன்*
*சினங்கொண்டு நீ சீறுகையில்*
*சிந்தை கலங்கி*
*பின் களிக்குதடி!*

*–03.02.1998*
*களத்தில் பத்திரிகை (28.02.1998)*

*நாற்குணம் என்றும் நற்பண்பு என்றும்*
*வேலிகள் போட்டுப் பெண்ணை*
*வீட்டுக்குள் அடைத்தோர் நாண*
*போற்கொடி ஏந்தி நிற்கும்*
*தமிழீழப் பெண்களே!*

*நஞ்சினை நெஞ்சில் மாட்டி – நீவிர்*
*நம் நிலம் மட்டுமா காக்கின்றீர்!*
*பெண்ணினம் நிமிர்ந்து வாழ*
*பெரும் பணியும் செய்து விட்டீர்!*

*–10.04.1998*

# *வெளிநாட்டுத் தமிழரே..!*

"*அம்மா.. பசிக்குது...!*"

*என் பிஞ்சு முனகுகையில்*
*நெஞ்சு வலிக்கிறது!*

*என் வீட்டில்*
*உலை கொதித்து*
*ஒரு சில வாரங்களாச்சு!*

*களுத்துறைச் சிறையிலே*
*அடிதான் உணவாய்*
*அவனுக்குக் கிடைத்ததாம்!*
*மருந்தாய் உணவும்*
*அவ்வப்போது கிடைத்ததாம்!*
*உளம் நலிந்து*
*உருக்குலைந்து*
*படுக்கையிலே கிடக்கிறான்*
*என் கணவன்!*

*அடுப்பிலே பூனைதான்*
*அலமந்து கிடக்கிறது!*

*வெளிநாட்டுத் தமிழரே..!*
*ஊர் விட்டு ஊர் ஓடி*
*உறவுகளையும் தொலைத்து*
*உமக்கும் அங்கு வேற்று நாட்டில்*
*அகதிக் கோலம் தான்!*

*அதனால்தான் சொல்கிறேன்*
*வெள்ளிப் பாத்திரத்தில்*
*எமக்கொன்றும்*
*அள்ளித் தர வேண்டாம்!*

*உப்புக் கஞ்சிக்குக் கூட*

*ஒரு சிறங்கை அரிசி இல்லை*
*உம் எச்சில் கையையாவது*
*ஒரு தரம்*
*எம் பக்கம் உதறி விடும்!*

*-27.08.1998*
*ஐபிசி தமிழ் வானொலி (கவிதைக்களம் - 27.09.1998)*

# ஓ... இதுதான் காதலா!

*அன்பே!*
*உனக்கும் எனக்கும் என்ன சொந்தம்!*
*உன்னோடு எனக்கென்ன பந்தம்!*

*அலை அலையாய் உன் நினைவு வந்து*
*என் மனமலையில் மோதுகையில்*
*சிறு மண்மேடாய் சரிந்து போகிறேன்!*
*ஒரு பனி போலக் கரைந்து போகிறேன்!*

*தொலை தூரம் நீ வாழ்ந்தாலும்*
*உன் நினைவுகளோடுதான் நான்*
*தினம் வாழ்கிறேன்!*

*குளிரிலே இதமான போர்வையாய்*
*வியர்க்கையில் குளிர் தென்றலாய்*
*மழையிலே ஒரு குடையாய்*
*வெயிலிலே நிழல் தரு மரமாய்*
*தனிமையில் கூடவே துணையாய்*
*கால்களில் தழுவுகின்ற கடல் அலையாய்...*
*உன் நினைவுகள் எப்போதும்*
*என்னோடுதான்!*

*ஓ... இது தான் காதலா!*
*இது காதலெனும் பந்தத்தில்*
*வந்த சொந்தமா?*

*உனக்கு ஒன்று தெரியுமா?*
*திருமணத்திலும்*
*உடல் இணைவதிலும்தான்*
*காதல் வாழுமென்றில்லை!*

*அன்பு நூலின் அதிசயப் பிணைப்பில்*
*நெஞ்சில் வாழ்வதும் காதல்!*

*நினைவுகளின் தொடுகையிலே*
*உயிர்ப் பூக்கள் சிலிர்க்கின்ற*
*என் மனமென்னும் தோட்டத்தில்*
*உனக்காகத் துளிர்த்த காதல்*
*இன்று எனக்குள்ளே*
*விருட்சமாய் வியாபித்து*
*பூக்களாய் பூத்துக் குலுங்கி*
*அழகாய்*
*கனி தரும் இனிமையாய்!*

*இது நீளமான காலத்தின்*
*வேகமான ஓட்டத்திலும்*
*அன்பு வேரின் ஆழமான ஊன்றலில்*
*நின்று வாழும் உண்மைக்காதல்!*

*- 14.02.1999*
*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - 13.06.1999)*
*சூரியன்.கொம் (24.12.2001)*
*வார்ப்பு.கொம் (2002)*

# இதுவும் காதலா..?

*ஈமெயில் பார்த்து*
*இதயச் சுவர்கள் வேர்த்து*
*முகம் தெரியா உனக்காய்*
*முழுமதியாய் சிரித்து..!*

*இதற்கு என்ன பெயர்..!*
*இதுவும் காதலா..?*

*–1999*

# *இலவு காத்த கிளியாக..!*

*பனியது பெய்யும்*
*அழகினைக் கண்டு*
*மனமது துள்ளும்!*

*வெளியினில் சென்றால்*
*பனியது பெய்யும்*
*குளிரது அறைய*
*உடலது நடுங்கும்*
*உதிரமும் உறையும்!*

*பனியது பெய்யும்*
*குளிரது அறைய*
*பனியது பூவாய்*
*மரங்களில் தெரியும்!*

*அழகினை ரசிக்க*
*அவகாசமின்றி*
*பணமது தேடி*
*வேலைக்காய் கால்கள்*
*பனியினில் விரையும்!*

*குளிரிலும் பனியிலும்...*
*பணமது தேடி...!*
*'இது என்ன வாழ்க்கை'*
*மனம் தினம் அலுக்கும்!*

*மடியினில் சுமந்த*
*மகவுடன் குலாவ*
*மணியின்றி*
*மனமது துவழும்!*

*வெயிலதன் வரவில்*
*பனியது ஓடும்!*
*மரமது துளிர்க்க*

*மனமது மலரும்!*
*மலர்களும் சிரிக்கும்!*

*மாறும் மாறும்...!*
*எல்லாம் மாறும்!*
*பணமது தேடும்*
*நிலையது மாறும்!*
*ஓய்வாய் உட்கார்ந்து*
*கதைக்க முடியும்!*
*ஒன்றாய் சேர்ந்து*
*உண்ண முடியும்!*
*விரும்பிய மட்டும்*
*உறங்க முடியும்!*
*குழந்தைகளுடனே*
*குலாவ முடியும்!*
*குடும்பமாய் கூடி*
*களிக்க முடியும்...!*

*முடியும்...! முடியும்...!*
*பட்டியல் நீளும்!*
*...முடியும்...! முடியும்...!*
*எல்லாம் முடியும்...!*

*இலவாய் நினைவுகள்*
*காய்த்துக் குலுங்க*
*கிளியாய் மனமும்*
*காத்து நிற்கும்!*

*-03.03.1999*
*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - 14.03.1999)*
*இளைஞன் இதழ் 45 (ஓகஸ்ட் 2000)*
*வார்ப்பு.கொம் (2002)*

# எம்மவர் மட்டும் எங்கே..?

*பனியின்றி குளிரின்றி*
*இந்த வருடத்தின் முதல் சிரிப்பு!*

*இயற்கையின் சிரிப்பில்*
*துளிர்ப்பது மரம் மட்டுந்தானா..!*
*மலர்வது மலர் மட்டுந்தானா..!*
*மனிதர்களுந்தான்..!*

*நகரமே சிரித்தது*
*யேர்மனியின் அந்த நகரமே சிரித்தது*
*சிரித்துக் களித்தது*
*இயற்கையும் சிரிக்க மனிதரும் சிரிக்க*
*மலராய்த் தெரிந்தது*

*குட்டைப் பாவாடைகளும்*
*கட்டை ரீசேர்ட்டுகளும்*
*தலை காட்டா விட்டாலும்*
*சிட்டுக் குருவிகளாய் இளசுகள்*
*உதட்டோடு உதடுரசி*
*மூக்கோடு மூக்குரசி*
*கெஞ்சலும் கொஞ்சலுமாய்...*

*வட்ட மேசைகளைச் சுற்றி*
*வட்ட மிட்ட கதிரைகளில்*
*பெரிசுகளும் சிறிசுகளும்*
*கண் பார்த்துக் கதை பேசி*
*மெல்லுதட்டில் தமை மறந்து*
*ஐஸ் சுவைத்து...*
*கை கோர்த்து நடக்கையிலும்*
*காதலுடன் இடை தழுவி*
*உடல் உரசி*
*மனம் சிலிர்க்க மலர் பரிமாறி...*

*இயற்கையோடு இயற்கையாக*

*சிரித்து... சிலிர்த்து...*
*ஊரே களித்திருக்கையில்*
*இந்நகரில் வாழும் இருபது தமிழரில்*
*ஒருவரையும் காணோமே..!*

*வன்னியும் வாகரையும்*
*மனத் திரையில் ஓட*
*எங்கேயும்*
*பிற்சேரியாவிலும் ரெஸ்ரோறண்டிலும்*
*கனவுகளைக் கழுவிக் கொண்டிருக்கிறார்களோ..?*

*-03.04.1999*

*ஐபிசி தமிழ் வானொலி (கவியரங்கம் - 11.04.1999)*
*இந்த வாரச் சிறப்புக் கவிதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.*

# ஐபிசி தமிழ் வானொலி இரண்டாவது ஆண்டு நிறைவு

*புலத்திலே இன்று*
*புகழ் பரப்பி நிற்கும் ஐபிசியே!*

*புலத்திலும் தமிழ்*
*நலத்துடன் வாழ*
*நீ புரிந்திடும் சேவையோ*
*ஞாலப் பெரியது!*

*மெல்லத் தமிழ் இனி*
*இல்லாது போகும் நிலை மாறி*
*மெல்லத் தமிழ் இன்று உலகெலாம்*
*மெல்லப் படுவதில்*
*உன் பணியும் அளப்பரியது!*

*இயந்திரமாய் எம் வாழ்வு*
*விரக்தியுடன் விரைகையிலே*
*துயர் தீர்க்கும் அருமருந்தாய்*
*எமை நோக்கி உன் வரவு!*

*தடைகள் பல தாண்டி*
*எடுத்த காரியங்கள்*
*யாவிலும் வென்று...*

*களைப்புடன் வருகையில்*
*குரல்களால் தழுவி*
*அலுப்புடன் சரிகையில்*
*பாடல்களால் தாலாட்டி*
*அறிவுக்கு விருந்தூட்டி*
*உடல் நலத்துக்கும் மருந்தூட்டி*
*எமக்கு நீ கொடுக்கும் விடயங்களோ*
*பெறுமதியில் கோடி!*

*வார்த்தைகள் வரவில்லை*
*வாழ்த்த*
*உன் வரவில்*
*மாற்றங்கள் பல எம் வாழ்வில்*
*மறுக்கவும் முடியவில்லை!*

*நேற்றுத்தான் வந்தாய் போல்*
*ஒரு நினைவு*
*அதற்குள் ஆண்டுகள் இரண்டு*
*அவசரமாய் ஓடியது நனவு!*

*உனை வாழ்த்தவா!*
*குரல்களினால்*
*எம் உளம் கவர்ந்த*
*உன் உறுப்பினர்களை வாழ்த்தவா?*
*குரல்களைக் காவி வந்து*
*எம் மனங்களை நிரப்பும்*
*வான் அலைகளை வாழ்த்தவா?*
*யாரை வாழ்த்த!*
*யாருக்கு நன்றி சொல்ல!*

*இரண்டு ஆண்டுகளல்ல*
*இன்னும் பல நூறு ஆண்டுகள்*
*ஐபிசி வாழ*
*மனசார வாழ்த்துகிறோம்!*

*ஐபிசி தமிழ் வானொலி (09.06.1999)*

*(ஐபிசி தமிழ் வானொலியின் வரவும், அந்த நேரத்தில் அது எமக்குத் தந்த ஆனந்தமும் மறக்க முடியாதது)*

# பேருந்துப் பயணத்தில்...

*ஐபிசி நிகழ்ச்சிகளின் தரம்*
*உயர்ந்து கொண்டே போகிறது!*

*வேலைக்கு...*
*கட்டாயம் போக வேண்டுமா?*
*கேள்வியொன்று எனக்குள்!*

*'ஆம்'*
*முண்டியடித்துக் கொண்டு*
*முன் வந்து நிற்கிறது*
*பணம் எனும் பாரிய பிரச்சனை!*

*மனதை*
*ஐபிசி நிகழ்ச்சிகளை*
*தன்னுள் வாங்கி*
*என் உள் மகிழ்விக்கும்*
*என் வீட்டு வானொலியில்*
*விட்டு விட்டு*
*மனமின்றி*
*வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்!*

*–16.10.1997*
*ஐபிசி தமிழ் வானொலி (பூவையர் பூங்குரல் – 23.04.1998)*

# நிராகரிப்பு

*என் கண்களில்*
*அருவி பாய்ந்தது*
*நீ உன் காதலை*
*அவளிடம் தெளித்த போது!*

*இரவு*
*பகலை விழுங்கியது*
*காதலை நிராகரித்த*
*உன் கடிதம்*
*என் சந்தோசத்தை*
*விழுங்கியது போல்!*

*நெஞ்சில்*
*சுரீரென்று வலித்தது*
*உன் காதல் அம்பு*
*என் நண்பியைத்*
*துளைத்த போது!*

*ஐபிசி தமிழ் வானொலி (காலைப்பரிதி - 05.09.1999)*
*வார்ப்பு.கொம் (2002)*

# நினைவிலே ஒரு தீபாவளி

*செம்பருத்தி சிவந்திருக்க
ரோஜாக்கள் அழகு தர
வண்டுகள் ரீங்கரிக்க
மல்லிகை மணங்கமழ
தென்னோலை சரசரக்க
அணிலொன்று தொப்பென்று
முற்றத்தில் வீழ்ந்து
மாதுளையில் தாவி
மாயமாய் மறைந்தது!*

*கொடிப்பூப்போட்ட
கோடிச் சட்டையுடன்
தங்கை கொலுபோல இருந்தாள்
அசைந்தாலே சட்டை
நலுங்கிப் போகுமென்று
அசையாது இருந்தாள்
வெடி வேண்டுமென்று
தம்பி அடம் பிடித்தான்!*

*பகட்டாகப் பட்டுடுத்தி
பக்கத்து வீட்டு மாமி
ரோட்டிலே பவனி வந்தாள்
மகன் வெளிநாட்டிலாம்!*

*நரகாசுரனை
வதம் செய்த கதை பற்றி
பாட்டி குட்டிப் பிரசங்கமே செய்தாள்!*

*பங்கிறைச்சிக்குப் போன அப்பா
திரும்புகையில்
கள்ளும் கொண்டு வந்தார்!*

*அள்ளி முடிந்த ஈரத்தலையுடன்
அம்மா அடுக்களையில் மாய்ந்தாள்!*

*பால் குடித்த ஆட்டுக்குட்டி*
*பரவசமாய் துள்ளி வந்து*
*குரோட்டனில் ஒரு கடிகடித்து*
*மீண்டும் தாய் முலை வாய் புதைத்தது!*

*சின்னச்சின்னதாய்*
*நெஞ்சை நிறைத்த சந்தோசங்கள்*
*அன்றைய தீபாவளியில்!*

*இன்றைய தீபாவளியில்*
*அருகில்*
*மாதுளையும் இல்லை!*
*மரம் தாவும்*
*அணிலும் இல்லை!*
*குட்டிப் பிரசங்கம் செய்ய*
*பாட்டியும் இல்லை!*
*பட்டாசும் இல்லை!*

*எம்மவர் வதை படும்*
*அவலம் மட்டும்*
*சேதியாய் தினம் வரும்!*
*அது கேட்டு*
*மனம் கொதித்து*
*உடல் தகித்து*
*கண்ணீரைச் சொரிகையிலும்*
*கள்ளமாய் சில நினைவுகள்*
*உள்ளத்துள் ஒளித்திருக்கும்!*

*அன்றைய தீபாவளியும்*
*அதனோடு*
*வெல்லமாய் இனித்திருக்கும்!*

*-06.10.1999*
*ஐபிசி தமிழ் வானொலி (வாசற்படி - 07.10.1999)*

# விடுதலை வேண்டி..!

*காற்றோடு கை கோர்த்து*
*ஊர்க்கோலம் போகின்ற*
*மகரந்தத் துகள்களுக்கு*
*என் நாசித்துவாரமும்*
*பாதையாகிப் போனதில்*
*தொண்டைக்குழி வரை*
*மசமசத்தது*

*விடுப்புப் பார்ப்பதே*
*வேலையாக இருந்ததில்*
*விழிகளும் சிவந்தன*

"*அக்கா!*
*சித்திரைக்குப் பொங்கியாச்சே?*"
*பாதையில் ஒரு தமிழன்*
*பாசமாய் கேட்டான்*

"*...ம்ம்ம்...* "
*காலைப் பரபரப்பில்*
*பாணைக் கடிக்கவே*
*மறந்தேன் என்றால்*
*நம்புவானா..!*

*பாதி இரவில் விழித்திருந்து*
*ஊரில் வாழும் உறவுக்காய்*
*அழுதேன் என்றால்*
*நம்புவானா..!*

*கற்தரையில் எம்மவர்*
*நித்திரை கொள்வதை*
*ஊர்க்கடிதம்*
*சொன்னதில் தொடங்கி*
*இந்திய வல்லூறுகள்*
*எம்மவரை*

*உயிர் வதம் செய்வதில்
தொடர்ந்து*

*செம்மணிப் புதைகுழியில்
எம் பெண்மணிகளின்
புதைகுழிகள்
தொடர்வது வரை*

*சத்தியமாக நான்
சித்திரைக்கு
பொங்கவில்லை என்றால்
நம்புவானா...!*

*"ஓம் தம்பி பொங்கியாச்சு!"*

*என் பொய்யில்
முகம் மலர்ந்து
முன்னேறிப் போறவனும்
மூக்கைத்தான் தேய்க்கிறான்
கண்களையும் கசக்குகிறான்*

*அழகிய மலர்களின்
நுண்ணிய மகரந்தக்களுக்கு
இவன் மூக்கும் பலிதானோ...!*

*காற்றோடு கை கோர்த்து
ஊர்க்கோலம் போகின்ற
மகரந்தத் துகள்களிடமிருந்தாவது
அந்நிய மண்ணில்
அடைக்கலம் தேடும்
எங்கள்
மூக்குகளுக்கும் கண்களுக்கும்
விடுதலை வேண்டுமென
இயற்கையை வேண்டிநின்றேன்!*

*-13.04.1999*

*எரிமலை சஞ்சிகை (மே, 2000)*

*பெயல் மணக்கும் பொழுது (ஈழப்பெண்களின் கவிதைகள் - மே, 2007)*

# ஏன் மறந்து போனாய்?

*பெண் விடுதலை பற்றி*
*நண்பர்களுடன்*
*நயமாகப் பேசுகிறாய்!*

*சீதனக் கொடுமை பற்றி*
*மேதாவித் தனமாய்*
*மேடையில் விவாதிக்கிறாய்!*

*பெண்ணையும்*
*கண்ணாகப் பார்க்கும் படி*
*கதைகள் புனைகிறாய்!*
*கவிதைகள் வடிக்கிறாய்!*

*வீட்டிலே மட்டுமேன்*
*தாலி கட்டியவளை*
*வேலைக்காரி ஆக்குகிறாய்!*
*சீதனம் தரவில்லையென்று*
*வார்த்தைகளால் குத்துகிறாய்!*

*தாலி கட்டியவள்*
*உன் தாரம் மட்டுமல்ல*
*அவள் பூமியில் பிறந்ததே*
*உனக்கு சேவகம் செய்ய அல்ல!*
*வாழ்க்கையின் ஆசைகள்*
*வசந்தத்தின் தேடல்கள்*
*நேசத்தைத் தேடும்*
*நெஞ்சுக்குள் ஏக்கங்கள்*
*கூடவே தன்னோடு*
*கூடாமல் கலைந்து...*
*உன்னோடு கூடவே*
*உனக்காகச் சிரிப்பவளும்*
*பெண் ஜென்மம் தானென்று*
*மறந்துதான் போனாயோ?* *(20.06.1999)*

*ஐபிசி தமிழ் வானொலி (வாசற்படி 01.07.1999)*

# தாய்மனமும் சேய்மனமும்

*சிறகிருக்கிறது*
*என்னைப் பறக்க விடு*
*என்பது பிள்ளை மனம்!*

*சிறு பிள்ளை நீ*
*என் இறகுக்குள் ஒளிந்து கொள்*
*என்பது பெற்ற மனம்!*

*புரியாமல் பறந்தோடும்*
*பிள்ளை மனம்*
*புரியும் போது*
*அதுவும் பெற்ற மனம்!*

*-11.06.1999*
*ஐபிசி தமிழ் வானொலி (வாசற்படி - 17.06.1999)*

# முத்தம்

*அன்பு தேசத்தில் ஒட்டப்பட்ட*
*அழகான முத்திரை!*

*ஆழ்ந்த அன்பைக் கூறும்*
*அழகான சொல்!*

*காதல் தேசத்தின்*
*இறுக்கமான கை குலுக்கல்!*

*அன்பையும் காதலையும் பிழிந்தெடுத்த*
*இனிய மது!*

*ஆயிரமாயிரம் தரம் எழுதியோ*
*சொல்லியோ*
*புரிய வைக்க முடியாத அன்பை*
*ஒரே தரத்தில் உணர வைக்கும்*
*உன்னத பரிபாஷை!*

*-21.07.99*
*ஐபிசி தமிழ் வானொலி (தேடி வரும் தென்றல் - 21.07.1999)*
*வார்ப்பு.கொம் (2002)*

# அப்பா

*"நான் தமிழன்"*
*மார் தட்டிச் சொன்னாய்!*

*"மமே கொட்டியா"*
*புத்தன் வழி வந்தவர்கள்*
*மத்தியில் சொல்லி*
*எத்தனை இன்னல்கள் பட்டாய்!*

*58இல் தமிழன் அடிபட்டதிலிருந்தே*
*இரத்தம் கொதிக்க*
*கொழும்பு மோகம் கொண்டவர் மீது*
*கோபப் பட்டாய்!*

*கொழுந்து விட்ட உன் கோபத் தீயில்*
*வளர்ந்து விட்ட உன் பிள்ளைகள்*
*உணர்வு கொண்டெழுந்து*
*விடுதலை வேட்கையுடன்*
*களம் புகுந்த போது*
*பாசத்தில் நெஞ்சு வெந்தாலும்*
*தேசத்தை எண்ணிப் பேசாதிருந்தாய்!*
*புத்திரரின் வீரத்தை எண்ணி*
*பூரித்தும் இருந்தாய்!*

*தாண்டிக்குளம் தாண்டும்*
*விதியொன்று வந்த போது*
*மீண்டும் ஊர் திரும்பும் நம்பிக்கையோடு*
*தாண்டினாய்!*
*கொழும்பு வசதி பிடிக்காது*
*வவுனியாவிலே தஞ்சம் கொண்டாய்!*

*வருத்தமுற்ற போது*
*வைத்தியம் செய்ய*
*போதிய மருத்துவர் இன்றி*
*எல்லாத் தமிழரையும் போல்*

*அடிபட்டும் போனாய்!*

*வலிந்த*
*என்னைச் சுமந்த உன் தோள்கள்*
*வலுவிழந்து...*
*கால்கள் நடை தளர்ந்து...*

*களத்தில் இரு புத்திரரையும்*
*புலத்தில் மறு பிள்ளைகளையும்*
*தொலைத்து விட்டு*
*எங்கோ அந்தகாரத்துக்குள்*
*பிள்ளைப் பாசத்தைத் தேடித் தேடிக்*
*களைத்த உன் விழிகள்*
*பன்னிரண்டு வருடங்கள் கழித்து*
*என் முகம் பார்த்ததும்*
*கொட்டும் அருவியாகி*
*எனை நனைத்த போது*
*உனை அணைத்துத் தாயானேன்!*

*எனை நனைத்த அக்கணத்தை*
*உயிருள்ளவரை மறவேன்!*

*-01.12.1999*
*ஐபிசி தமிழ் வானொலி (வாசற்படி 01.07.1999)*

# தொலைக்காதே உன்னை!

*யாரும் எதையும்*
*மறந்து போவதில்லை*
*மறதிக் குவியலுக்குள்*
*புதைந்து கிடப்பதை*
*கிளறிப் பார்க்கத்தான்*
*விரும்புவதில்லை*

*சிலர்தான்*
*கிளறிக் கிளறி*
*கிளர்ந்தெழுகிறார்கள்*

*சிலரோ*
*உருகி உருகி*
*அழுது வடிக்கிறார்கள்*

*இன்னும் சிலரோ*
*பொருமிப் பொருமி*
*போரிடத் துணிகிறார்கள்*

*பெண்ணே..! நீ*
*கிளர்ந்தெழு!*
*அழுவதை மறந்திடு!*
*போரிடவும் துணிந்திடு!*

*யாரும் ஏதும் சொல்வார்களேயென்று*
*நாணிக் கோணி வீணே நிற்காதே!*

*திணிப்பதற்கென்றே திரிவார்கள்*
*குறை பிடிப்பதில்*
*கண்ணாய் இருப்பார்கள்*
*கணப் பொழுதில் உன் மனதை*
*கலைத்தும் விடுவார்கள்*

*தொலைக்காதே உன்னை!*

*தொலைத்து விடு உன்*
*மனதைக் கலைப்பவரை!*

*தொலைத்து விடு*
*பெண்ணென்று விழிப்பவர்களை*
*பூவென்று நுகர்பவர்களை*
*கண்ணென்று கதை பேசுபவர்களை*
*இன்னும் சொல்லி ஏய்ப்பவர்களை..!*

*-மார்ச், 2000*
*ஐபிசி தமிழ் வானொலி (08.03.2000)*
*இளைஞன் (ஏப்ரல், 2000)*

# நாற்குணம்

*நாற்குணம் என்றும்*
*நற்பண்பு என்றும்*
*வேலிகள் போட்டுப் பெண்ணை*
*வீட்டுக்குள் அடைத்தோர் நாண*
*போர்க் கொடி ஏந்தி - அங்கே*
*நாட்டினைக் காக்கின்றார்கள்- எங்கள்*
*தமிழீழ விடுதலைப்புலிப் பெண்கள்!*

*இருந்தும்...*
*சீதனம் என்னும் சிறுமை இன்னும்*
*சீராக அழியவுமில்லை!*
*ஆணாதிக்கமும் அடக்கு முறையும்*
*முற்றாக ஒழியவுமில்லை!*

*ஐபிசி தமிழ் வானொலி (2000)*
*ஈழமுரசு பாரீஸ் (2000)*

# புற்றுநோய்

*வானம் சிரித்திருந்தது*
*வண்ணப் பூக்களும் மலர்ந்திருந்தன*
*தண்ணென்ற காற்று ஒவ்வொருவரையும்*
*தழுவிச் சென்றது!*

*பன்னிரண்டு பெண்கள்*
*வேலை செய்யும்*
*அந்த அலுவலக அறை மட்டும்*
*ஏனோ மௌனித்திருந்தது!*

*'இளவரசி டயானேவே இம்சைப் பட்டாளே'*
*பெண் படும் பாடுக்காய்*
*கண் கலங்கும்*
*சொன்யாவும் மௌனம்!*

*விண்வெளி தாண்டி*
*சந்திரனைத் தொட்ட Charles Contrad கூட*
*வீதி விபத்திலே மாண்டானே!*
*விதி பற்றி விவாதிக்கும்*
*வரோனிக்காவும் மௌனம்!*

*மனதால் தினம் தினம்*
*மணாளனை விவாகரத்துச் செய்து*
*சதா அவனைக் திட்டிக் கொட்டும்*
*மெலிசாவும் மௌனம்!*

*கண்ட கண்ட*
*பகிடியெல்லாம் சொல்லி கழுத்தறுக்கும்*
*எறீனாவின் விசும்பல் மட்டும்*
*இடைவிடாது கேட்டது!*

*நாளை மறுநாள்*
*அவள் மார்பகத்தை*
*எடுத்து விடப் போகிறார்கள்!*

*–16.4.2000*

# நான் ஒரு பெண்!

"வீணை" என்று
சொல்லாதே என்னை!
நீ மீட்டுகையில் நாத மிசைக்கவும்
மீட்டாதிருக்கையில் மௌனிக்கவும்
நான் ஒன்றும் ஜடமில்லை!

"கிளி மொழியாள்" என்று
சொல்லாதே என்னை!
நீ சொன்னதைச் சொல்லவும்
சொல்லாதிருக்கையில்
தனிமைச் சிறையில் வாடவும்
நான் ஒன்றும் பட்சி இல்லை!

"பூ" என்று
சொல்லாதே என்னை!
தேவைப்பட்டால் சூடவும்
வாடி விட்டால் எறியவும்
நான் ஒன்றும்
எந்த வண்டுக்குமாய்
இதழ் விரிக்கும் மலரில்லை!

"பாவை" என்று
சொல்லாதே என்னை!
நுள்ளியும் கிள்ளியும் நீ விளையாடவும்
அலுப்புத் தட்டினால் தள்ளி எறியவும்
நான் ஒன்றும்
வாய் பேசாப் பொம்மையில்லை!

மீட்டத் தெரியாதவனிடம்
அகப்பட்ட வீணையாகவோ
பேசத் தெரியாதவன் வீட்டு
கூட்டுக் கிளியாகவோ
சூடி எறியும் பூவாகவோ
கிள்ளி விளையாடி
அள்ளி உறவாடி

*பின் தள்ளி எறியும்*
*பாவைப் பிள்ளையாகவோ*
*எண்ணாதே என்னை!*

*சொல்லாலும் செயலாலும்*
*அன்போடு தொடுகின்ற*
*மென் உறவுக்காய் ஏங்குகின்ற*
*உன் போல மனம் கொண்ட*
*'பெண்' என்று மட்டும்*
*எண்ணு என்னை*
*அது போதும் எனக்கு!*

*ஈழமுரசு பாரிஸ் (4-10 மே, 2000)*
*ஐபிசி தமிழ் வானொலி (நிலாமுற்றம் - 8.5.2000)*
*ஐபிசி தமிழ் வானொலி (நங்கையர் நாழிகை - 2001)*

# சுகமான நினைவு!

*செங்கொண்டைச் சேவல்*
*குரலெடுத்துக் கூவ*
*செம் மஞ்சட் கதிர்களை*
*கதிரவன் வீச*
*பறவையினம் சிறகடிக்க*
*வண்டினங்கள் ரீங்கரிக்க*
*குயிலினங்கள் இசைபாட*
*மெல்லென விடிந்தது*
*அங்கெனது காலை!*

*மாட்டு வண்டி கடகடக்க*
*மாடு இரண்டும் விரைந்தோட*
*சலங்கைகள் கிலுகிலுக்க*
*பால் காரன் மணியோசை*
*வீதிகளில் ஒலித்து நிற்க*
*கோயில் மணி ஓசையிலே*
*புனிதமானது அக்காலை!*

*சூரியக் கதிர் பட்டு*
*கிணற்று நீர் பளபளக்க*
*துலாபதித்து நீர் மொண்டு*
*சிரித்து நிற்கும் செம்பருத்தி வேலி*
*மறைத்து நிற்க*
*மனங்குளிரக் குளிக்கையிலே*
*சிலிர்த்து நின்றது அங்கெனது காலை!*

*ஆர்ப்பரிக்கும் கடலோசை*
*காற்றலையோடு தவழ்ந்து வர*
*அரசு உதிர்த்த இலைகள்*
*சரசரக்கக் கால் பதித்து-எனது*
*ஆத்தியடி வீதியிலே நடந்து*
*நெடிதுயர்ந்த பனையுதிர்க்கும்*
*பனம் பூவை நுகர்ந்த படி*
*பனங் கூடல் வழியேகி*

*காணிக்கந்தோர் கறுத்தக்கொழும்பானும்
வேலாயுதன் காணி புளியங்காயும்
களவாய்ப் பிடுங்கி
பள்ளியைத் தொடுகையிலே
கலகலத்த மாணவரின்
கள்ள மற்ற சிரிப்பினிலே
மகிழ்ந்திருந்தது அக்காலை!*

*பாணி ஊற்றிப் பக்குவமாய்
பாட்டி செய்த பனாட்டும்
கொடியினிலே அரைகுறையாய்
காய்ந்திருந்த பனங்கிழங்கும்
நினைவினிலே வந்து
பசி கிளப்ப
பள்ளிக் கூட மணியும்
பார்த்து ஒலிக்க
துள்ளியெழுந்து ஓடுகையிலும்
வைரவர் கோயில்
இலந்தைக் காய்க்காய்
வழியினிலே மெனக்கெட்டு
"முனி" யென்று ஒருத்தி கத்த
குடல் தெறிக்க ஓடி..
சுடச் சுட அம்மா வடித்த
சுடு சாதமும்
பொரியலும் வறுவலும்
தொட்டுக் கொள்ள துவையலுமாய்
சுவையும் மணமுமாய்
அறுசுவையாய் நகர்ந்தது
அங்கெனது மதியம்!*

*நகரும் மதியத்தை விட்டு
நகரா மனமோ
நொட்டு நொறுக்குக்காய்
சட்டிகளையும் சாடிகளையும்
தட்டியும் தடவியும்
தொட்டுத் தேடியும்
கிண்டிக் கிளறியும்*

*அதை நோண்டி*
*இதை நோண்டி*
*அரை குறையாய் ஒவ்வொன்றிலும்*
*அணில் கோதல் கோதியும்*
*அடங்காது*
*வேலிகளில் அண்ணா முண்ணா*
*பூவும் தேடி...!*

*மாலையானதும் மாங்கொட்டையும்*
*கூடி இருந்து கொக்கானும் வெட்டி*
*அம்மா திட்ட*
*விட்டுச் செல்ல மனமின்றி*
*கால் முகம் கழுவி*
*படிப்பதாய் சொல்லி*
*தங்கைமாருடன் பலகதை பேசி*
*இரவு உணவுக்காய்*
*அம்மா அழைக்க*
*இதுதான் சமயமென்று*
*புத்தகத்தை மூடி*
*இரவுப் படுக்கையின் முன்*
*மணக்கும் மல்லிகைப் பந்தலின் கீழ்*
*நிலவின் ஒளியில்*
*ஒய்யாரமாய் அமர்ந்து*
*உடன் பிறப்புகளுடன்*
*ஓராயிரம் அளந்து...*

*நினைவே சுகமாகும்*
*இந்த நினைவே நனவானால்...*
*நிறைகிறது மனது*
*மீண்டும்*
*நிஜமாகுமென்ற கனவில்...!*

*–2000*
*ஐபிசி தமிழ் வானொலி (காற்றலை – 30.06.2000)*

# பெண்ணே நீ இன்னும் பேதைதானே!

*மஞ்சளில் தாலி கட்டி*
*வேலி என்பார்!*

*மலரினைத் தலையில் வைத்து*
*மலரே என்பார்!*

*சொல்லினை அம்பாய் எய்து*
*துடிக்காதே என்பார்!*

*வேரினில் குத்தி விட்டு*
*வாடாதே என்பார்!*

*கையினில் தீயைத் தந்து*
*தீயாதே என்பார்!*

*கண்ணிலே கையை விட்டு*
*கலங்காதே என்பார்!*

*புண்ணினைக் கிளறி விட்டு*
*புளுங்காதே என்பார்!*

*மண்ணினைத் தாங்குவாள் போல்*
*பொறுமை கார் என்பார்!*

*நுண்ணிய உணர்வுகள்*
*உனக்கேன் என்பார்!*

*பெண்ணெனப் பிறந்ததற்காய்*
*இன்னும் என்ன சொல்வார்!*

*பேதைதானே நீ*
*பேசாதே என்பாரா?!*

*-17.08.2000*
*பாரிஸ் ஈழமுரசு(31 ஓகஸ்ட் - 06 செப் 2000)*

# *நிமலராஜனே!*

*நிமலராஜனே!*
*செய்தி தந்த நின் மரணம்*
*இன்றெமக்குச் செய்தியானதோ!*

*உண்மைக்கு அங்கு இதுதான் விதியோ*
*நேர்மைக்கு உந்தன் உயிர்தான் பலியோ!*

*வரையறையற்ற வஞ்சகச் செயல்களால்*
*தமிழர்களை வதைக்கின்ற*
*நிலையற்ற மனம் கொண்ட*
*பச்சோந்திகளின் முறையற்ற செயல்களால்*
*தொடர்கின்ற சதியால்*
*உனக்கிந்தக் கதியோ!*

*நீ*
*சிதை பட்டுப் போன செய்தியில்*
*ஒரு கணம் நாம் பதை பதைத்தோம்!*
*மனம் துடித்தோம்!*

*ஓங்கி ஒலித்த உன் குரல்*
*ஓய்ந்து போனதோ!*

*நேர்மையை மையாக்கி*
*எழுதுகோலைத் துணிவாய் தூக்கி*
*புலத்துக்கெல்லாம்*
*நியத்தை வடித்தவனே*
*நீ இன்று*
*எமக்கு எழுத்தானாயோ!*

*நியம் பேசியதால்*
*நீ இன்று*
*நினைவாகிப் போனாயோ!*

*–19.10.2000*
*ஐபிசி தமிழ் வானொலி (20.10.2000)*

# களிக்கும் மனங்களே கசியுங்கள்!

*உப்பளக் காற்றிலே*
*உயிரைக் கலைய விட்ட*
*எங்கள் பிள்ளைகளின்*
*குருதி வெள்ளத்தில்*
*ஏற்றி வைத்த*
*வெற்றிக் கொடியை*
*பற்றிப்*
*பரவசப் பட்டு*
*மனம்*
*ஆனந்தக் கண்ணீர் வடித்தது!*

*நியம் தந்த களிப்பில்*
*அவசரமாய் வந்த*
*ஆனந்தக் கண்ணீர்*
*அது நியமானது!*
*பிறகேன் போலியாய்*
*பார்ட்டியும்..!*
*படாடோபமும்..!*

*போர்க்களத்திலே வீழ்ந்தும்*
*குருதி வெள்ளத்திலே சாய்ந்தும்*
*போனவர்களின் தியாகமும்*
*அவர்கள்*
*ஈன்றவர்கள் மனதை*
*பற்றி நிற்கும் சோகமும்*
*நாம் இங்கு*
*பாடி நிற்கவும்*
*பார்ட்டி வைக்கவுமா..?*
*இல்லை!*
*வாடி நிற்கும் எம்மவர்*
*வாழ வேண்டும்!*
*கூடிழந்த எம்மவர்க்கு*
*கூரை வேண்டும்!*
*ஓடி ஓடிக் களைத்தவர்க்கு*

*ஓய்வு வேண்டும்!*
*போலியாய்*
*எதுவும் வேண்டாம்..!*

*களிக்கும் மனங்களே*
*கசியுங்கள்!*
*வெற்றி கண்ட மண்*
*வற்றி நிற்கிறது*
*பற்றோடு கை கொடுங்கள்!*

*-29.04.2001*
*ஐபிசி தமிழ் வானொலி (ஏப்ரல், 2001)*

# வழக்கம் போல் அடுப்படிக்குள்!

*எப்போதும் போலவே*
*இன்றைய எனது காலையும்*
*அவசரமாய்த்தான் விடிந்தது!*

*இப்போதெல்லாம்*
*இனிய கனவுகள் என்பது*
*எல்லோருக்கும் போல்*
*எனக்கும்*
*இரவுகளில் வருவதில்லை!*

*வானிலே பறக்கும் விமானங்கள்*
*நேரிலே மோதுவதாய்*
*ஏதேதோ கனவுகள்*
*தீப் பிழம்புக் குவியலுக்குள்*
*நான் நின்று தவிப்பதாய்*
*திடுக்கிட்ட விழிப்புகள்!*

*ஆனாலும்*
*விடியல்கள் வழமை போலத்தான்...*

*இன்று என்ன சமையல்*
*என்பதில் தொடங்கி*
*கூட்டல் கழுவல்*
*துடைத்தல் பெருக்கல்*
*எல்லாம் முடித்து...*
*வேலைக்கு ஓட வேண்டுமென்பதில்*
*பரபரக்கும் மனசு!*

*இத்தனைக்கும் நடுவே...*
*"அகப்பையும் கையுமாய்*
*அடுப்படியை வலம் வருவதும்*
*படுக்கை விரிப்பதுவும் தான்*
*பெண்ணுக்கு வரைவிலக்கணம்*
*என்ற நினைப்பை*

*கொழுத்தி எறிந்தவள் மாலதி..."*
*பெண் பெருமை பாடியது வானொலி!*

*எனக்குள்*
*மின்னலாய் கோடிட்டது மகிழ்ச்சி!*
*நானே*
*களத்தில் நிற்பது போன்ற திருப்தியுடன்*
*மாலதியின் நினைப்பை மனத்தில் இருத்தி*
*பத்திரிகையில் வந்த கவிதை படித்து*
*ஒரு மிடுக்கோடு நிமிர...*

*"என்னப்பா இண்டைக்குச் சாப்பாடு..?*
*பேப்பரும் கையுமா*
*நீ இருந்தால்..!*
*எனக்குப் பசிக்குது..."*
*கடுப்போடு என் கணவன்*
*சிடுசிடுக்க*
*மிடுக்கும் போய்*
*மாலதியின் நினைப்பும் போய்...*

*அகப்பையும் கையுமாய்*
*அடுப்படிக்குள் நான்*
*வழக்கம் போல...*

*-10.10.2001*
*ஐபிசி தமிழ் வானொலி (10.10.2001)*
*சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்*
*International Research Journal of Tamil 2020*

*2ம் லெப். மாலதி (சகாயசீலி 04.01.1967-10.10.1987) தமிழீழ விடுதலைப் போரில், கோப்பாய் கிறேசர் வீதியில், இந்தியப் படையுடனான நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதல் விடுதலைப்புலிப் பெண் போராளி.*

# புயலடித்துச் சாய்ந்த மரம்

*காற்றே!*
*உனக்கும் இரண்டு முகமா..?*

*தென்றல் என்றுதானே*
*என்னைத் தந்தேன்!*
*இளமையின மதாளிப்புடன் நான்*
*பசுமையாய் செழித்திருக்கையில்*
*அல்லும் பகலும்*
*தழுவலும் வருடலுமாய்*
*அருகிருந்து*
*என் இளமையைச் சுகித்து விட்டு*
*எனதிந்தத் தள்ளாத வயதில்*
*உன் சுயத்தைக் காட்டி விட்டாயே!*

*கனிதரும் காலம் போய்விட்டாலும்*
*நீ களைப்பாக வரும்போதெல்லாம்*
*இளைப்பாற இடம் தந்திருப்பேனே!*
*வேரோடு சாய்த்து விட்டாயே!*

*வீழ்ந்ததில் வேதனை இல்லை*
*உன் நியமான*
*புயல்முகம் கண்டதில்தான்*
*பலமான அதிர்ச்சி!*

*வேரறுந்ததில் சோகமில்லை*
*நீயறுத்தாயே!*
*அதைத்தான் ஏற்காமல்*
*மனதுக்குள் வெகுட்சி!*

*21.02.2002*
*ஐபிசி தமிழ் வானொலி (சமுத்ரா - 28.02.2002)*
*பதிவுகள் - இதழ் 45 (செப்டம்பர் 2003)*

# காற்றே!

*காற்றே..!*
*யார் மீது கோபம் கொண்டு*
*புயலானாய்..?*

*எவர் மீது மையல் கொண்டு*
*தென்றலானாய்..?*

*–22.02.2002*

*காற்றே..!*
*ஏன் மௌனம் காக்கிறாய்..?*
*மரங்களை அசைத்தாவது*
*ஒரு குரல் கொடேன்!*
*உன்*
*இருப்பின் இடம் காண..!*

*–22.02.2002*

# குளிர்

*குளிர்..!*
*அது என்ன செய்து விடப் போகிறது..?*
*சுடுவதாக ஒரு போதும்*
*அது பொய் பேசியதில்லையே!*
*கதகதப்பாய்*
*தழுவுவதாகச் சொல்லி*
*யாரையும் ஏமாற்றியதுமில்லையே!*

*குளிர்..!*
*அது என்ன செய்து விடப் போகிறது..?*

*–பெப்ரவரி, 2002*
*வார்ப்பு.கொம் (2002)*

# உனக்காய் வாழ்!

*நாம் நாமாக வாழாது*
*நரகத்துழன்று*
*ஊருக்காய் வாழ்வது*
*வீணல்லவா*
*பெண்ணே!*
*ஊருக்காய் வாழாதே!*
*உனக்காய் வாழ்!*

*ஈழமுரசு பாரீஸ் (மார்ச், 2002)*
*ஐபிசி தமிழ் வானொலி (08.03.2002)*

# உனதாய்...

பெண்ணே!
நெருப்பாயும் வேண்டாம்
செருப்பாயும் வேண்டாம்
உனது இருப்பு
உனது விருப்போடு
உனதாய் இருக்கட்டும்!

*ஐபிசி தமிழ் வானொலி (காலைப்பரிதி - 08.03.2002)*

# உனக்கு விடுதலை வேண்டும்!

*பெண்ணே..!*
*உனக்கு விடுதலை வேண்டும்!*

*முதலில் உனக்கு உன்னிடமிருந்து*
*விடுதலை வேண்டும்!*

*கலாச்சாரம் பண்பாடு என்ற*
*கட்டுத்தளைகளிடம்*
*நீயே உன் மனசை அடகு வைத்து*
*இல்லையில்லை*
*உனது அம்மா*
*அம்மம்மா*
*ஆச்சி...*
*அவர்களைப் போலவே*
*நீயும்...*

*விட்டு விலகவோ*
*தப்பி ஓடவோ*
*வழி தெரியாது*
*உன்னை அண்டியுள்ள எல்லோராலும்*
*இறுகப் பிணைக்கப் பட்டு*
*மனசு நெரிக்கப் பட்டு...*
*இறுகப் பற்றியிருக்கும்*
*சமூகச் சங்கிலியை*
*உடைத்தெறிய முடியாமல்*
*மனசில் வலியும் உளைவுமாய்...*

*பெண்ணே..!*
*உனக்கு விடுதலை வேண்டும்!*
*முதலில் உனக்கு உன்னிடமிருந்து*
*விடுதலை வேண்டும்!*

*–17.03.2002*

# *ரணம்*

*உனக்காக*
*என் சுயத்தை எல்லாம் இழந்தது*
*போதுமென்று நினைக்கிறேன்!*

*உனக்கு*
*உன் வாழ்தலின் மீது*
*பற்றுதல்!*

*அதற்காக*
*இன்னும் எத்தனை முறைதான்*
*ரணமான என் மனதின் மேல்*
*திரும்பத் திரும்பவாய்*
*பிறாண்டுவாய்..!*

*உன்*
*ஆசைகளின் வடிவங்களாய்*
*நீண்டிருக்கும்*
*கோரப் பற்களையும்*
*கூரிய நகங்களையும்*
*நீயுன்*
*ஆசை தீர்க்க முயலும் கணங்களில்*
*விரித்த போலித் திரைகளுக்குள்*
*மூடி மறைத்து வைத்தாலும்*
*மீண்டும் மீண்டும் அவை*
*கோரமாக எனை நோக்கி!*

*போதும்..!*
*இனியும் பிறாண்டாதே!*
*இழப்பதற்கு என்னிடம்*
*இனி எதுவுமே இல்லை!*

*-20.03.2002*
*பதிவுகள்- இதழ் 46 (ஒக்டோபர் 2003)*

# மனநோயாளி

*நீதான்
உலகமென்ற நினைப்பில்
இத்தனை வருடங்கள்!
எனது
அசைவுகள் எல்லாமே
உன்னோடு மனம் கோர்த்து
உன்னையே மையப் படுத்தி..!*

*உனது கை கோர்ப்பு
நட்புடனா!
நடிப்புடனா!
தெரியவில்லை*

*திடீரென நீயென்
கைகளை உதறி விட்டு
விசுக் விசுக்கென
உன் கைகளை வீசி
நடக்கத் தொடங்கியதும்...*

*மனவெளிகளின்
தனிமை தாங்காது
புடைத்த மூளைநரம்புகளின்
வலியோடு... நான்!*

*அவை
வெடித்துச் சிதறி...
´மனநோயாளி` என்ற முத்திரை
என் மேல் குத்தப் படுமுன்
ஒரு வார்த்தை சொல்லிவிடு
நட்புடனா..?
நடிப்புடனா..?*

*ஐபிசி தமிழ் வானொலி (24.03.2002)
யாழ்.கொம் (மார்ச் 2002)*

# சாதனைகள் பல விதம்!

*கொழும்பு வீதிகளில்...*
*வீதி ஒழுங்குகள்*
*வாகனங்களின்*
*வேகங்களில் கரைய*
*பாதை கடப்பதே*
*பெரிய சாதனை!*

*–17.05.2002*

# பால்வினை

*பால்வினை என்னும்*
*பாழ் கிணற்றுக்குள்*
*வாழ்விழந்த பெண்கள்*
*மீள வழி உண்டா..!*

*ஏழ்மையினாலும்*
*சில மனிதர்களின் இச்சையினாலும்*
*சூழ உள்ளவர்களின் சூழ்ச்சியினாலும்*
*ஊனமானது உடல்கள் மட்டுமல்ல!*
*அவர்கள் உள்ளங்களும் தான்!*

*-மே 2002*
*பெண்கள் சந்திப்பு மலர் (2002)*

# *நீயே ஒரு அழகிய கவிதைதானே.!*

*நீயே..!*
*அதிசயமாய்*
*அழகிய ஓவியமாய்*
*நகர்ந்து கொண்டே இருக்கும் நதியாய்*
*தழுவுகின்ற காற்றலையாய்...*
*எத்தனை பேருக்கு வசந்தமானாயோ..?*

*உன்னை எண்ணி..!*
*பூக்களின் நறுமணங்களை*
*எத்தனை பேர் நுகர்ந்தார்களோ..!*

*உனது விழிமொழிதலால்*
*எத்தனை விழி வாசல்கள் பூச்சொரிந்தனவோ..!*

*உனது குடிபுகுதலினால்*
*எத்தனை மனமுகடுகளில்*
*இனிய கானங்கள் ஒலித்தனவோ..?*

*இன்று உன் பிரிதலினால்*
*எத்தனை மனங்கள் ஏக்கப் புள்ளிகளுடன்*
*காதல் கோலங்களுக்காய் காத்திருக்கின்றனவோ..?*

*புரியாமல்... புலம்பாதே..!*
*நீயே ஒரு அழகிய கவிதைதானே..!*
*பிறகேன் தேடுகிறாய் கவி - தை யை..?*

*-04.08.02*
*வார்ப்பு.கொம் (2002)*
*யாழ்.கொம் (மார்ச் 2002)*

*(காதல் கை கூடாததால் விரக்தியுற்றிருந்த நண்பன் ஒருவனுக்காக)*

# உன் பலம் உணர்ந்திடு..!

*பெண் வலம் சமையல் புலத்திலென்ற*
*காலம் போயாச்சு!*
*வெண்கலத்துடன் போராடிய அவள் கரங்கள்*
*சுடுகலன்கள் ஏந்தியாச்சு!*
*இன்னுமா..?*
*புலம் பெயர்ந்த என்னகத்துத் தமிழ்ப் பெண்ணே..!*
*உன் பலம் தெரியாது*
*சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும்*
*ஒளிந்திருந்து*
*கண்கலங்குகின்றாய்!*
*உன் பலம் உணர்ந்திடு!*

*-10.10.2002*

## *அழகு..!*

*மனதை அசைத்து விட்டு*
*மௌனமாய் நின்றான்!*

*அழகு அவன்*
*விழிகளிலா...*
*மொழி மறந்த இதழ்களிலா...*
*அல்லது மௌனத்திலா..!*

*சிரிக்கக் கூடாதென உதட்டை*
*விரிக்காதிருந்தாலும்*
*விழிகளில் அது வழிந்தது!*

*பார்க்கக் கூடாதென விழிகளைச்*
*சுருக்கியிருந்தாலும்*
*கருமணிகள் கட்டுடைத்து*
*என் விழிகளோடு மோதின!*

*இவனோடு பேசாது போனால்*
*எனக்குப் பேசத் தெரிந்ததில்*
*என்ன பிரயோசனம்..!*

*"பெயர் என்ன?"*

*விழி விரித்து*
*இதழ் உடைத்து*
*மௌனம் கலைத்தான்!*

*"முத்தழகன்"*

*பெயர் கூட அழகுதான்!*
*படமெடுக்க அனுமதிப்பானா?*

*அனுமதியின்றி...*
*அவசரமாய்...*
*குறை நினைப்பானா?*

*இப்போ...*
*மனத்திரையில் அவன் வந்து*
*மனதை அசைத்து விட்டு*
*மௌனமாய் நிற்கிறான்!*

*அழகு அவன்*
*விழிகளிலா..!*
*மொழிய மறந்த இதழ்களிலா..!*
*அல்லது மௌனத்திலா..!*

*யாழ்.கொம் (October 2002)*

# பிறப்புக்கு அர்த்தம் சொன்ன தூய தாயகன் பிரபாகரன்!

*தலைவர்கள் எல்லோருமே*
*மக்கள் மனதில்*
*நிலை கொள்வதில்லை*
*இவன் நிலை கொண்டவன்!*

*அண்ணனாய்*
*ஆசானாய்*
*தம்பியாய்*
*தந்தையாய்*
*மைந்தனாய்...*
*மக்களோடு மக்களாய் நின்று*
*தலைமைக்கு அர்த்தம் சொன்னவன்!*

*தமிழனின்*
*அடிமைத் தளையறுக்க என்றே*
*அவதரித்தவன்!*

*பாட்டுக்களும் கவிதைகளும்*
*பெண்ணடிமை பற்றிப் பேச*
*செயலால்*
*பெண்ணடிமை விலங்கொடித்தவன்!*

*இவன் வெறுமனே தலைவனல்ல!*
*தமிழன் தலை நிமிர்ந்து நிற்க*
*காலம் எமக்களித்த வரலாற்று நாயகன்*
*பிறப்புக்கு அர்த்தம் சொன்ன தூய தாயகன்!*

*இவனை வாழ்த்துவதில்*
*பெருமை யடைகிறேன்!*
*பேருவகை கொள்கிறேன்!*

*–26.11.2002*

# நட்பென்றுதானே நம்பினேன்..!

*போரிலும்*
*புலம் பெயர் வாழ்விலும்*
*வாழ்வின் வசந்தங்கள்*
*வாடி விட்ட*
*தனிமை பூத்த*
*ஒரு பொழுதில் தானே*
*உன் தொலைபேசி அழைப்பு*
*எனைத் தேடி வந்தது!*

*நட்பென்றுதானே நம்பினேன்!*
*கை கோர்க்க எண்ணி*
*விரல் நீட்டினேன்!*

*என் விரலை*
*சிறை வைத்து*
*பின் முறித்தெறிவதற்கான*
*முன்னேற்பாடுதான் அது என்று*
*முற் கூட்டியே நீ*
*சொல்ல மறந்ததேன்..?*

*12.01.2002*
*யாழ்.கொம் (2002)*

# கல்யாணச் சந்தை!

*இது ஒரு*
*வினோதமான சந்தை!*

*எல்லாப் பொருட்களையும்*
*பணத்துக்காக விற்பார்கள்*
*இங்கு மட்டும்*
*பெண் என்ற*
*உயிர்ப் பொருள் ஒன்று*
*பணம் கொடுத்து*
*விற்கப் படும்!*

*-02.12.2002*
*யாழ்.கொம் (2002)*

# மௌனம்

*இதுவரை*
*என் மௌனத்தையே*
*பலருக்குப் பதிலாக்கியுள்ளேன்!*

*இப்போதெல்லாம்*
*உன் மௌனமே*
*எனக்குள் கேள்வியாகின்றது!*

*–18.01.2003*

# காலமிட்ட விலங்கையும் உடை!



*பொல்லெடுத்து*
*உனை அடித்தார்களா..!*
*சொல்லெடுத்து*
*மனம் சிதைத்தார்களா..!*
*மெல்லியவள் என்று சொல்லி*
*மெல்லவே பின்னே*
*தள்ளியவர் முன்னே*
*கல்லுடைத்து...*
*வாழ்வின்*
*வளம் பொருத்த முனையும்*
*பெண்ணே..!*
*உடை*
*கல்லோடு சேர்த்து*
*காலமிட்ட விலங்கையும் உடை!*
*வெல்வாய்!*

*-10.03.2003*
*ஐபிசி தமிழ் வானொலி (மார்ச் 2003)*

# மனசு சூனிய வெளிக்குள்...

*மனசு சூனிய வெளிக்குள்*
*சிக்கித் தவிக்கிறது!*

*உன்னவள்*
*உன் அஸ்தியை*
*ஊருக்கு அனுப்புவது பற்றிப் பேசினாள்*
*அவள் புண்ணியவாட்டி!*
*உன் அருகிருந்து*
*தன் கடன் முடித்து விட்டாள்!*

*நான்*
*எதுவுமே செய்யாதிருந்து விட்டு*
*இப்போ...*
*சூனிய வெளிக்குள் நின்று*
*சுற்றிச் சுழல்கிறேன்!*

*உயிர் போன பின்னும்*
*நீ அருகிருக்கிறாய் என்பதில்*
*வலி தெரியாதிருந்தது!*
*சிதையேறிய போதுதான்*
*நீ இனியில்லை என்ற நினைப்பில்*
*மனசு பதை பதைக்கிறது!*

*நாடொன்றுதானே*
*நன்றாக உறவாடியிருப்பேன் என்று*
*ஊரவர்கள் நினைப்பார்கள்!*
*யாருக்கும் நான் ஏதும் சொல்லவில்லை!*
*போரென்று வந்து புலம் பெயர்ந்த பின்*
*வேர்களும் விழுதுகளும் வெகு தூரமாகி...*
*போனதை நினைத்துப்*
*புலம்புவதுதானே வாழ்வாகிப் போச்சு!*

*நாமெல்லோரும்*
*நேரமில்லை யென்றும்*

*தூரமாப் போச்சு என்றும்*
*இயலாமைகளுக்கு*
*போர்வை போர்த்திப் பழகி விட்டோம்!*

*இத்தனை வருடங்களில்*
*எத்தனை தரம் சந்தித்திருப்போம்!*
*மின்னஞ்சலும்*
*தொலைபேசியும் இல்லையென்றால்*
*தொடர்பாடல்*
*என்றைக்கோ அறுந்து போயிருக்கும்!*
*எமது ஓரிரு சந்திப்பின் போதான*
*உறவு முறை சொல்லி அழைக்கும்*
*உன் இதமான சிரிப்பு மட்டுந்தான்*
*என்னோடு நின்றிருக்கும்!*

*நான் அழவில்லை!*
*மனசுதான் அலைகின்றது!*
*இல்லாத உன்னோடு கை கோர்த்து*
*உல்லாச உலா வருகின்றது!*
*நீ இல்லை என்பது*
*உறைக்கும் சமயங்களில்*
*மல்லாக்காய் வீழ்கின்றது!*

*-03.08.2003*
*ஐபிசி தமிழ் வானொலி (ஒகஸ்ட், 2003)*
*பதிவுகள் - இதழ் 45 (செப்டம்பர் 2003)*

*(என் மாமியின் மகன் ராசனுக்காக)*

# *வியப்பு!*

*ஒவ்வொரு பக்கமாகப் புரட்டித்தானே*
*உன்னைப் படித்தேன்!*
*எப்படி மறைத்தாய்*
*உனது அந்தப் பக்கங்களை..?*

*–12.06.2004*

# தத்துவம்

*"உன்னைக் கொடு*
*என்னைத் தருவேன்"*
*காதலிக்கையில்!*

*"உன்னைக் கட்ட*
*என்ன தருவாய்"*
*கல்யாணத்தில்!*

*"உன்னைக் கட்டி*
*என்ன கண்டேன்"*
*தொடரும் வாழ்வில்!*

*-09.02.2005*

# நிபந்தனை

*நான்*
*யார் யாருடன் பேசலாம்*
*யார் யாருடன் பேசக் கூடாது*
*என்பதையெல்லாம்*
*அவனேதான் தீர்மானிக்கிறான்!*

*தான்*
*யார் யாருடனெல்லாம்*
*உறவு வைத்திருக்கிறேன் என்ற விடயத்தில்*
*நான் தலையிடவே கூடாது என்ற*
*நிபந்தனையைச் சற்றும் தளர்த்தாமல்...*

*–2006*

# ஏன் இதெல்லாம்..?

*யுத்தமும் இரத்தமும் பார்த்துப் பார்த்து*
*இதயம் வலிக்கிறது! இமைகள் கனக்கின்றன!*

*ஏன் இதெல்லாம்? எதற்காக இதெல்லாம்?*
*யார் கேட்டது போர் வேண்டுமென்று..!*

*ஊர் ஊராய் கலைந்து உறவுகளும் தொலைந்து*
*பார் எல்லாம் இதுதானே பஞ்சமின்றி நடக்கிறது!*

*தீ யிட்டுக் கொழுத்தும் தினவெடுத்த வஞ்சம்*
*ஏன் இன்று இதெல்லாம்? இதயம் கனக்கிறது!*

*கனவெல்லாம் பறக்கிறது கன ரக விமானங்கள்!*
*அயல் எல்லாம் எரிவதாய் அனலாய் நினைவுகள்!*

*தூங்கும் விழிகளுக்குள்ளும் தூங்காத பயங்கள்!*
*துடிக்கும் இதயத்துள்ளும் துயரச் சுமைகள்!*

*காற்றைக் கிளிக்கும் அசுரக் குண்டுகள்*
*வீழும் போது சிதறும் மனிதங்கள்!*

*ஐயோ..! காதை அறைகிறதே அவலக் குரல்கள்*
*போதும் போதும்.! இந்த அவலங்கள்!*

*–2006*

# மனசு தகிக்கிறது!

*உடல் சிதற முன்னமே மனம் சிதறிய*
*கோணேஸ்வரியின் மரணச் செய்தியிலும்*
*உடல் புதையும் முன்னரே மனம் வதை பட்ட*
*கிருசாந்தியின் மரணச் செய்தியிலும்...*
*இன்னும் இவை போலவே*
*வெளியுலகத்துக்குத் தெரிந்தும்*
*தெரியாமலும்*
*மனம் கருகியும் உடல் சிதறியும்*
*சிதை பட்டுப் போன சகோதரிகளின்*
*வந்ததும் வராது போனதுமான*
*மரணச் செய்திகளிலும்...*
*வந்த வேதனையையும் கோபத்தையும் விட*
*அதிக கோபம் வருகிறது*
*இன்றைய சிலரின் பேனா முனைகளில்*
*அந்தச் சகோதரிகளின்*
*அங்கங்கள் சிதையும் போது!*

*கவிதைகளுக்கும் விவாதங்களுக்கும்*
*அவர்களின் அங்கங்கள்தான் கிடைத்தனவா?*
*மனசு தகிக்கின்றது!*

*எங்கள் சகோதரிகளின் மூச்சை நிறுத்திய*
*இராணுவங்களின் துப்பாக்கிகளை விட*
*இவர்கள் பேனா முனைகள் கொடியன!*

*எங்கள் தேசக்காற்றை மாசு படுத்திய*
*எக்காளங்களை விட*
*இவர்களின் சிந்தனைகளில் ஊற்றெடுக்கும்*
*எழுத்துக்கள் குரூரமானவை!* –11.03.2007

*கோணேஸ்வரி (17.12.1997) இலங்கை இராணுவத்தால் பாலுறுப்பில் கிரனைட் வைத்து படுகொலை செய்யப்பட்ட நான்கு குழந்தைகளின் தாய். கிருசாந்தி குமாரசாமி (07.09.1996) ஆறு இலங்கை இராணுவத்தினரால் குழு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்.*

# வாழ்க்கைக் கோட்பாடுகள்

*வாழ்க்கை மிகவும் அவசரமாக*
*விரைந்து கொண்டிருக்கிறது!*
*எந்த அவசரத்திலும்*
*உனது நினைவுகளை மட்டும்*
*விட்டுச் செல்ல முடியாமல்*
*என்னோடு*
*எடுத்துச் சென்று கொண்டே இருக்கிறேன்!*

*அன்பு காதல் நன்றி...*
*போன்ற சொற்களுக்குள்*
*அடக்க முடியாத உணர்வுகள்*
*சமயத்தில் என்னை*
*திக்கு முக்காட வைக்கின்றன!*

*நடுநிசியில்*
*உன் நினைவுகள்*
*என்னைத் தட்டி எழுப்புகின்றன!*

*பகல் பொழுதுகளில்*
*ஆழ்ந்த மௌனத்தில் இருப்பதாய் நினைக்கிறார்கள்*
*உன்னோடு நான் பேசிக் கொண்டிருப்பது*
*தெரியாதவர்கள்!*

*பறக்க நினைக்கும் போதெல்லாம்*
*வாழ்க்கைக் கோட்பாடுகள்*
*வலிந்திறுக்கும் விலங்குகளாய்*
*என்னைக் கட்டிப் போட்டு*
*செயலிழக்க வைக்கின்றன!*

*நடை உடைகளைக் கூட*
*மற்றொருவர் தீர்மானிக்கும்*
*இந்தச் சமுதாயத்தின் மத்தியில்*
*எப்படிச் சிறகசைப்பேன்!*

*சிலதை வாய் திறந்து*
*யாரோடாவது பேச வேண்டும் போல*
*மனசு அந்தரிக்கும்*
*அப்படித்தான் இப்போது உன்னைப் பற்றியும்!*

*–28.05.2007*

# கண்ணீர்த்துளிகள்

*சிந்தக் கூடாதென நினைத்தாலும்*
*முந்தி விடுகின்றன*
*இந்தக் கண்ணீர்த்துளிகள்!*

*கொட்டி விட முனைந்தாலும்*
*விடாமல்*
*ஒட்டிக் கொண்டிருக்கின்றன*
*சில நினைவுகள்!*

*-26.09.2007*

# பொல்லாத மனம்

*தனிமையில்*
*உன் நினைவுகளோடு*
*சல்லாபிப்பதும்*
*பலர் நடுவே*
*தனிமை உணர்வுகளோடு*
*மல்லாடுவதுமாய்...*
*எப்போதும்*
*இருப்பதை விடுத்து*
*இல்லாததற்காய் அல்லாடும்*
*இந்தப் பொல்லாத மனம்!*

*–27.09.2007*

# சொல்லப்படாதவைகள்

*சொல்லப்படாதவைகள்*
*வார்த்தைகளாகவும் மௌனங்களாகவும்*
*என்னுடன்*
*பயணித்துக் கொண்டே இருக்கின்றன!*
*சொல்வதற்கான சாத்தியங்களே*
*இல்லையெனத் தெரிந்திருந்தும்!*

*-10.10.2012*

# *பிரியாவிடை*

*நேற்று*
*அவளைக் கட்டியணைத்து*
*கண்ணீர் வடித்து*
*Sekt உடைத்து*
*துக்கம் கொண்டாடினார்கள் அவர்கள்!*

*23 வருடங்கள் ஒன்றாக வேலை செய்தவள்*
*போகிறாள் என்று!*

*இன்றும் கொண்டாடினார்கள்*
*Red Wine உடைத்து...*

*அவள் போய் விட்ட சந்தோசத்தை!*

*-08.10.2014*

# தொடுதல்

*மென்மையான தொடுதல்களின்*
*உன்னதம் தெரியாதவர்கள்*
*எம்மில் பலர்!*

*கணவன் மனைவியர் கூட*
*கட்டிலில் மட்டுமே*
*தொட்டுக் கொள்பவர்களாய்...*

*-04.11.2014*

# இணை பிரியாத இளஞ்சோடிகள்

*அன்றொரு நாள் அவர்கள்*
*இணைபிரியாத இளஞ்சோடிகள்!*
*கை கோர்த்தும்*
*உதடு உரசியும்*
*இடை வளைத்தும்*
*இறுக அணைத்தும்*
*சுற்றியுள்ளவர்களை*
*பொறாமைப் படுத்திக் கொண்டிருந்தார்கள்!*

*பின்பொரு நாள் அவர்கள்*
*பிரியப் போவதாக*
*பிரஸ்தாபித்தார்கள்!*

*இன்றும் அவர்கள்*
*கை கோர்த்தும்*
*உதடு உரசியும்*
*இடை வளைத்தும்*
*இறுக அணைத்தும்*
*சுற்றியுள்ளவர்களை*
*பொறாமைப் படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்*
*வேவ்வேறு துணைகளுடன்..!*

*-01.12.2014*

# திணிப்பும் பறிப்பும்

*யாரேனும் ஒருவர்*
*ஏதேனும் ஒன்றைக் காட்டி*
*எப்போதுமே*
*துயரங்களைத் திணித்துக் கொண்டும்*
*சந்தோசங்களைப் பறித்துக் கொண்டும்*
*திரிகிறார்கள்!*

*-23.02.2015*

# காகம் வெள்ளை என்கிறார்கள்

*"காகம் வெள்ளை" என்கிறார்கள் அவர்கள்!*
*ஒரு தரம் "இல்லை கறுப்பு" என்றேன்!*

*மறதலித்து "காகம் வெள்ளைதான்" என்கிறார்கள்!*
*மீண்டும் "இல்லை" என்றேன்!*

*கோபமாக கடுங்கோபமாக*
*"காகம் வெள்ளை" என்கிறார்கள்!*
*நான் மௌனமாகி விட்டேன்!*

*இப்போது அவர்கள் நம்புகிறார்கள்*
*நான் அவர்களை நம்பி விட்டதாக!*

*–26.3.2015*

# பறத்தலுக்கான சுதந்திரம்

*இறக்கைகளைப் பறித்து*
*கக்கத்தில் வைத்துக் கொண்டு*
*பறத்தலுக்கான சுதந்திரம் பற்றி*
*வாயோயாது*
*பேசிக் கொண்டே இருக்கிறார்கள்!*

*–27.03.2015*

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

*எனக்கும் அவர்களுக்கும்*
*இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்*
*எனது விட்டுக்கொடுத்தல்களில்தான்*
*இன்னும்*
*உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது!*

*–29.3.2015*

# *மனசு விசித்திரமானது!*

*மனசு விசித்திரமானது!*
*அது*
*யாரை உள்வாங்கும்*
*யாரைப் புறந்தள்ளும் என்பது*
*அதற்கே தெரிவதில்லை!*
*சிலரை மட்டும்*
*நெஞ்சிருத்தி வைத்திருக்கும்!*

*-08.11.2016*

# நாங்கள் கையாலாகதவர்கள்!

*நாங்கள் கையால் ஆகாதவர்கள்!*
*எங்களால் என்ன செய்ய முடியும்?*
*மனம் நோவோம்!*
*சில துளிகள் கண்ணீரைச் சிந்துவோம்!*
*Facebook இல் நாலு வரிகள் எழுதுவோம்!*
*அதன் பின்*
*ஒவ்வொரு வேதனையையும் போல்*
*'ஆஷிபா' வையும் மறந்து விடுவோம்!*
*மீண்டும் நினைவு வந்தால் - ஒரு*
*கவிதையோ அன்றில் கட்டுரையோ எழுதுவோம்!*
*எங்களால் முடிவது அவ்வளவுதான்!*
*நாங்கள் கையால் ஆகாதவர்கள்!*

*-16.04.2018*

*'ஆஷிபா', ஜம்மு-காஷ்மீர் மாநிலம், கத்துவா பகுதியைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுமி. இவர் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள், மற்றொரு அரச அதிகாரி உட்பட எட்டுப்பேர்களால் 10.01.2018 இலிருந்து நான்கு நாட்களாகத் தொடர்ந்து கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு மரணித்தவர்.*

# அறைந்து சாத்தப்படும் கதவு

*அறைந்து சாத்தப்படும்
ஒவ்வொரு கதவும்
திறந்திருக்கும் இன்னொரு
கதவுக்கான பாதையை
மூக்கு நுனியில்
வரைந்து விடுகின்றன!*

*–11.10.2018*

# துளிகள்

**அ**லை வந்து கரை சேரும்
மனம் எங்கோ அலை பாயும்!

**ம**ழை பிடிக்கும் என்பதால்
குடை பிடிப்பதில்லை!

**சி**ல பேரின்
ஒரு வார்த்தை போதும்
பெரு மகிழ்வில் திளைக்க!

**த**டைகள்
என்னை இடை நிறுத்தலாம்
மடை திறந்த
என் எண்ணங்களை அல்ல!

**உ**னது பொய்களால்
நிரம்பி வழிகிறது
எனது உலகம்!

**ஒ**வ்வொரு மரணமும்
மனதில் துயரை அப்பி விட்டு
தம்பாட்டில்
சென்று கொண்டிருக்கின்றன!



*எஸ். ரீ. பிறேமராஜன் (பிறேமராஜன் தியாகராஜா) - கவிஞர் தீட்சண்யன்*
*(வி.பு.அமைப்பின் புலனாய்வு-மொழிபெயர்ப்புப் பிரிவு)*
*30.01.1958 - 13.05.2000*

**அ**ண்ணா!

இதயத்தின் ஓரத்தில் ஆறாத சோகம்
விழிகளின் ஈரத்தில் வடியாத ஏக்கம்
உறக்கத்தில் கூட உறங்காத நினைவு
இதையெல்லாம் தந்து நீ எங்கு சென்றாய்..?

*–09.07.2000*



*பரதராஜன் தியாகராஜா (பரதன்) - மாவீரன் கப்டன் மொறிஸ் (M.O)*
*(வி.பு.அமைப்பின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்)*
*12.09.1969 - 01.05.1989*

*மறந்தேனா நான் இவனை*

*இன்றொருகால் நினைப்பதற்கு!*
*இல்லை - என் தம்பி*
*மண்ணை விட்டுத்தான் போனான்*
*என்னை விட்டல்ல!*

*-01.05.2020*



*பாலசபாபதி தியாகராஜா (சபா) - மாவீரன் கப்டன் மயூரன்*
*(தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின்*
*பிரத்தியேக நேரடி ஜாக்கெட் மெய்ப்பாதுகாவலர்)*
*01.11.1970 - 11.11.1993*

*பரதராஜன் தியாகராஜா (பரதன்) - மாவீரன் கப்டன் மொறிஸ் (M.O)*
*(வி.பு.அமைப்பின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்)*
*12.09.1969 - 01.05.1989*

*தம்பிமார்*

*அக்காமாருக்குக் கிடைத்த கொடைகள்!*
*அவர்களிடம் பட்ட அன்புக் கடனை*
*தீர்த்து வைக்கும் பாக்கியம்*
*எல்லா அக்காமாருக்கும்*
*வாய்த்து விடுவதில்லை!*

*அன்றொரு பொழுதில்*

*ஈழம் வென்று தருவதாகச்*
*சொல்லிச் சென்றனர்*
*என் தம்பியர்!*
*இன்றிவர்கள் இல்லை!*
*நின்றாடுவது*
*ஈழக்கனவும்*
*இவர்கள் பற்றிய நினைவுகளுமே!*

*–11.11.2016*

RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2021

# களம் மாறியும் மாறா போர்கள் சமூகக் கட்டமைப்பைத் தோலுரிக்கும் பெண்மொழிக்கவிதைகள்

முு. சுதா [அ,*], ஆ. பிரியா [அ], இரா.இரவிக்குமார்[அ]

[அ] தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# Unchanging Struggle in a Changing World: Unmasking the Social Mechanism in Female Verses

**M. Sutha [a,*], A. Priya [a], R. Ravikumar [a]**

[a] Department of Tamil, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India.

Corresponding Author:
sumuyogi@gmail.com

Received : 18-12-2019
Accepted : 07-02-2020

**ABSTRACT**

Despite the prevalence of gender-based theories of feminism and women language after 19 th century, several female scholars emerged from the Sangam era and sowed the seeds of this idea. The lists of the female poets are Avvaiyar, Perunkopendu, Andal, Karaikalammaiyar and present women language poets. With the changing times and the voices of various feminist rebellions, the social texture that is limited to women has not only changed, but the plight of women has increased on a daily basis. In particular, the definitions of women in the two different contexts of home and work are still unchanged. Although women are projected to have created a free space for education and economic quality, there are still women who accept subjugation as on unwritten rule. This paper is a study of women language verse, which has recorded this constant dehumanization as a weapon of language and provoking social conscience as feminism.

**Keywords:** Female, feminism, dehumanization

## ஆய்வுச் சுருக்கம்

பாலினப் பாகுபாட்டைக் களைய கையிலெடுக்கப்பட்ட பெண்ணியம், பெண்மொழி குறித்தக் கோட்பாடுகள், திறனாய்வுகள், கருத்தாக்கங்கள் பத்தொன்பதுக்குப் பிறகு வீரியம் பெற்றிருந்தாலும் சங்ககாலம் தொட்டு பல பெண்பாற்புலவர்கள் தோன்றி இச் சிந்தனைக்கான வித்துகளை விதைத்து வந்துள்ளனர். பெருங்கோப்பெண்டு, ஔவையார், ஆண்டாள், காரைக்காலம்மையார் முதல் இப்பட்டியல் அரசு மணிமேகலை, சந்திரவதனா, இளம்பிறை என இக்காலம் வரை நீளுகிறது. காலம் மாறினாலும், பல்வேறு பெண்ணியம் பேசும் கலகக்குரல்கள் தோன்றினாலும், பெண்களுக்கென வரையறுக்கப்பட்டச் சமூகக் கட்டமைப்பு மட்டும் மாறாமல் தினந்தோறும் பெண்கள் எதிர்கொள்ளும் அவலம் ஏராளம். அவற்றிலும் குறிப்பாக வீடு, வெளி(பணியிடம்) என்ற இருவேறு சூழலில் பெண் என்பவளுக்கான இன்னும்

மாறாத வரையறைகள் கல்வி, பொருளாதாரச் சமத்துவம் என்று பெண்ணுக்கான சுதந்திரவெளி உருவாக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும் மாறாத நியதிகள், வேறு வழியின்றி அதனை ஏற்றுச்செல்லும் பெண்களே இன்றும் உள்ளனர். இப்பெண்ணடிமைத்தனத்தை மொழியை ஆயுதமாகக் கொண்டு பெண்ணிலைவாதமாக சமூக மனசாட்சியைத் தூண்டும் வகையில் பதிவு செய்துள்ள பெண் மொழிக்கவிதைகள் குறித்தும், அவை உணர்த்தும் உண்மைகளை சமூகப்பார்வைக்குக் கொணருவதாகவும், பெண் மைய விமர்சன அணுகுமுறையில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

"பெண்ணுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. அவளுடைய ஆழ்மனதின் ஓட்டங்களைச், சின்னசின்னக் கனவுகளை, நடைமுறை வாழ்க்கையை உள்ளது உள்ளபடி சொல்லிப்போகும் மொழி அவளுடைய மனதின் மொழி. (பெண்மொழி, இணையத்தரவு) அதுவே பெண்மொழி. அதிகாரம் தொனிக்காத, அலங்கார வார்த்தைகளற்ற, மனதின் மொழியான இப்பெண்மொழி காலந்தோறும் தோன்றி வந்துள்ளது.

"கருத்துப்பரிமாற்றத்திற்கு மட்டுமே கருவியாக உள்ள மொழியில் பால் பாகுபாட்டிற்கு இடமில்லை என்றபோதும் பொதுவாக மொழியைக் கையாளும் அதிகாரம் எவர் வசம் உள்ளதோ அவரது கண்ணோட்டத்தை ஒட்டியே மொழியும் வடிவமைக்கப்படுகிறது" என்பதற்கிணங்க தந்தை வழிச்சமூகத்தில் மொழி ஆண் வயப்பட்டுப்போனது என்பதே உண்மை.

"ஆண்களின் கண்ணோட்டத்தில்...அவர்களால் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் படிப்படியாக வேரூன்றத் தொடங்கிய ஆண் முதன்மை பெற்ற சமூக அமைப்பு, பெண்ணைத் தனிமைப் படுத்தி வீடே அவளது உலகம் என அவளது எல்லைகளைக் குறுக்கியது; அவளுக்கென்று குறிப்பாகச் சில பங்குநிலைகளை, கடமைகளை-மீறக் கூடாத மரபுக் கோடுகளாக வரையறுத்தது. இதே அடித்தளத்தில் எழுப்பப்பட்ட மதம், சாத்திர சம்பிரதாயங்கள் என்ற பூச்சுக்களுடன் பண்பாட்டு ரீதியான பெண் ஒடுக்குமுறைகளுக்குத் தன் அங்கீகாரத்தை அளித்து ஆசீர்வதித்தது

மேற்குறித்த நிலைகளிலிருந்து பெண்ணுக்கு மீட்சி விளைய வேண்டுமென்பதும் பால்பேதமற்ற - மனித சமத்துவம் மலினப்படாத சமூகம் அப்போதுதான் உருவாக முடியுமென்பதுமே பெண்ணியத்தின் அடிப்படை இலக்குகள். "(எம்.ஏ.சுசீலா,இணையத்தரவு) என்பதற்கிணங்க சங்ககால இலக்கியங்கள் முதல் இக்காலம் வரை தனக்கென்று ஒரு சுதந்திர வெளியை உருவாக்கிக்கொண்டு, தன்னைப் பெண்ணாக்கும் வரையறைகளைச், சமூகச் சூழலை மீறிய கலகக்குரலைப் பெண்மொழியாகப் பெண்கவிஞர்கள் பதிவு செய்துவந்துள்ளனர். இத்தகைய பெண்மொழி ஆணாதிக்கச் சிந்தனைக்கு எதிராக வீரியம் பெற்று அவ்வப்போது தனது கலகக்குரலைப் பதிவு செய்தும் வருகின்றது (Aranga.Malliga, 2009; Annithamasu, 2004; Ajith, 2009; Ganesalingan, 2001; Salma, 2011; Suseela, 2006; Prema, 2014; Murugesa pandiyan, 2016; Vijayalakshmi, 2007; Vijayalakshmi, 2011).

காலம் காலமாகப் பெண்ணுக்கான கட்டியங்கள் ஆண்களாலும்,பெண்களாலும் எடுத்துரைக்கப்பட்டு வந்தாலும் ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பைத் தோலுரிக்கும்

**"பல் சான்றீரே! பல் சான்றீரே!**
**'செல்க' எனச் சொல்லாது 'ஒழிக' என விலக்கும்**
**பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!**
**அணில் வரிக் கொடுங் காய் வாள் போழ்ந்திட்ட**
**காழ் போல் நல் விளர் நறு நெய் தீண்டாது**
**அடை இடைக் கிடந்த கை பிழி பண்டம்**
**வெள் எட் சாந்தொடு புளிப் பெய்து அட்ட**
**வேளை வெந்தை வல்சி ஆக**
**பரற் பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்**
**உயவல் பெண்டிரேம் அல்லேம்மாதோ**
**பெருங் காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிதாகுகதில்ல எமக்க எம்**
**பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பு அற**
**வள் இதழ் அவிழ்ந்த தாமரை**
**நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே'(புறம் 246)**

எனக் கைம்பெண்களுக்குரியதாக வரையறுக்கப்பட்ட விதி முறைகளை ஏற்றுக் கொண்டு வாழ்வதை விட தீப்பாய்ந்து இறப்பதைமேல் என்றுரைத்து அவர் சார்ந்த சமூகத்தை பெண்ணுக்கு எதிரான சூழ்ச்சிச் சமூகமாக அறிவிக்கும் பெருங்கோப்பெண்டுவின் கவிதை, கணவன் இன்றிப் போனபின்னர் அவளது இழிநிலை குறித்தப்பதிவு என்றால்,

**காலையில் என்னசாப்பாடு? என்ற குரலோடு**
**தோளில் உன் ஸ்பரிசம்**
**தாண்டிச் செல்லும் நொடியில் தலை**
**சாய தோள்…**
**தாண்டும்போதும் தடுக்கிவிழும்போதும் ஆதரவான**
**உன் ஸ்பரிசம்…**
**பூங்காவில் குழந்தை என் கைவிட்டுமுன் ஓட**
**என்கை கோர்க்கும் உன்கை**
**குழந்தையோடு குழந்தையாய் மூவரும் விளையாட**
**உன்தோளில் என்னைச் சேர்க்கும் உன்ஆசை**
**என்று இத்தனையும் நாள்முழுதும் நான்தேட**
**குழந்தை உறங்கியதும் சட்டென்று என்மேல்**
**விழும் அந்த காமத் தொடுகை**
**ஏனோ ஏங்கிய மனத் விலகுகிறது"(பெண்மொழி,வலைப்பூ)**

உடன் பயணிக்கும் துணையிடம் வாழும் போது எதிர்நோக்கிக் கிடைக்கப்பெறாத அன்பை, பெண் நுகர்பொருளாக மட்டும் பயன்படுத்தப்படும் அவலம் குறித்ததுமான இப்பதிவு என காலந்தோறும் தம் உணர்வினை மொழி வழி எடுத்துரைப்பதால் மட்டுமே சமூக மனசாட்சியைத் தூண்ட இயலும் என்பதற்கு அவர்கள் தம் கவிதைகள் சான்று காட்டி நிற்கின்றன. "பெண் தன் குரலைத்தானே பதிவு செய்ய முன்வரும் நிலையில் தான் பண்பாட்டு அடிப்படையிலும் சமூகமரபுகள் சார்ந்தும் ஆழ்மன நிலையிலும் காலந்தோறும் எவ்வாறான

ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகிறாள் என்பதனை சரிவர அறிய இயலும்" என்ற பெண்ணியத் திறனாய்வாளர்களின் சிந்தனை வழி ஆண்மொழி, பெண்மொழி பாகுபாடும் அதன் தேவையையும் உணரமுடியும்.

காலந்தோறும் பெண்களுக்கான உரிமைகள் பேசப்பட்டு, வேண்டப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, சட்டமாக இயற்றப்பட்டு இன்று வரை கடந்து வந்தாலும், ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பயணித்தாலும், ஆணாதிக்கச் சிந்தனையினால் உருவாக்கப்பட்ட ஒரு சமூகக் கட்டமைப்பிலிருந்து இன்றும் சுதந்திர வெளியைச் சுவாசிக்க இயலாத பெண்நிலையை பெண்மொழிக்கவிதையே உணர்த்த இயலும். இந்த உணர்வினை ஆண்மொழியினால் தரஇயலாது

கலகக்குரல் எழுப்பியாயிற்று. கல்விகற்றுவிட்டாயிற்று. அனைத்துத் துறைகளிலும் கால் பதித்தாயிற்று. இனி ஆண்கள் தாம் உரிமை கோரவேண்டும் என்ற கேலிக்கூக்குரல்களுக்கு "களம் மாறியும் மாறாப்போர்களைக் கொண்டது எம் வாழ்க்கை. காலம் காலமாகக் குரல்கொடுத்தும் எங்கள் போர்க்களம் மாறுகிறதே தவிர போர்கள் மாறவில்லை என்பதாக அமைந்த பெண்மொழிக்கவிதைகள் சமூக மனசாட்சியைத் தூண்டி நியாயம் கேட்பதாக உள்ளன".

குடும்பம், பணி என்ற இருவேறு சூழலையும் எதிர்கொள்ளும் ஒரு பெண்ணின் மனவோட்டம், வேலைப்பளு, அதில் பெறும் .இழப்பு, இதுதான் சுதந்திரமா என்ற வினாக்களை எழுப்புகிறது."நாங்கள் வேலைக்குப்போகும் தேவகிகள்" (**அரசுமணிமேகலை,ப-5**) என்னும் கவிதை

**"நாங்கள் வேலைக்கப் போகிறோம்...**
**நீங்களும் வேலைக்குப் போகத்தான் வேண்டுமா?**
**ஒருசிலர் நீட்டும் வினாக்குறி**
**ஆம் வசதிகளோடு வாழவேண்டாமா?**

**என்ற பதிலை விடையாகத் தருவதாகக் கூறும் கவிஞர்,**

**"வசதிகளோடுதான் வாழ்கின்றோமா?**
**உள்ளம் எழுப்பும் கள்ளக் கேள்விக்கு**
**இல்லை! இல்லை என்பதே பதில்"**

என்கிறார்.. குழந்தைகளின் முன்னேற்றம் எங்கள் கையில் எனப்படுகிறது. உழைக்கிறோம். ஆனால் குழந்தைகளைப் பராமரிக்க நேரமில்லை அவர்கள் பேரில் சேமிக்கமுடிகிறது. பாடம் சொல்லிக் கொடுத்திட வீட்டிலும் எங்கு நேரமுள்ளது? "அலுவலில் கம்சன் தொல்லை.எங்கள் பிள்ளைகளோ ஊரில் தாயார் யசோதையிடம். தாயார் இல்லா வீடுகளில் பூதகி ஆயாமார்கள்

**பிள்ளைகளை இழுத்துத் தலைவாரி எத்தனையோ நாளாச்சே**
**அழுத்தி முத்தமிட்டு அனேக நாளாச்சே**
**கையில் பிசைந்தூட்டி கனத்த நாளாச்சே**
**நினைத்துப் பார்க்கின்றோம் பஸ்ஸில் போகையில்**

**நினைப்பை மறக்கின்றோம் அடுப்பைப் பார்க்கையில்…**

என்றவர்,

**“மகிழ்ச்சியைப் பணயம் வைத்துவிட்டு**
**வாழ்க்கைப் பயணம் மேற்கொள்ளும்**
**பரிதாபத்துக்கு உரியவர்கள்-வேலைக்குப்போகும்**
**தேவகிகள்.“**

என்கிறார். இக்கவிதை வேலைக்குச் செல்வதால் இழக்கும் தாய்க்கும் குழந்தைக்குமான பாசப்பிணைப்பைச் சுட்டுவது ஒருபுறமிருக்க வேலைக்குச் சென்று திரும்பும் பெண்களுக்கு அடுக்களை மட்டுமே உரியதாக ஆக்கப்படுவதும், இயந்திரமாய் அப்பெண்ணின் வாழ்க்கை மாறிய சூழலையும் இத்தகைய நிலையில் அப்பெண்ணின் மகிழ்ச்சி பணயம் வைக்கப்படுவதையும் எடுத்துரைக்கிறது.

**“இயந்திரம் போல இயங்குகின்ற நிழல்கோலங்கள்**
**இந்தியா முழுவதும் பரவிக் கிடக்கின்ற**
**வேலைக்குப் போகும் தேவகிகள்“**

என்ற இவரது வரிகள் பெண்களுக்கானச் சுதந்திரவெளி உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறி வந்தாலும் இன்றும் அவர்கள் பரிதாபத்துக்குரிய இயந்திரங்களே என்றுரைக்கும் வலியின் வெளிப்பாடாகத்தான் தோன்றுகின்றன.

“வீடு' , 'வெளி' ஆகிய இரண்டு களங்களிலும் பெண்கள் இரண்டாம் பாலினமாகக் கருதப்பட்டுத் தன் மதிப்பையும், சமத்துவத்தையும் இழந்தனர். பால் அடையாளமாக மட்டுமே உணரப்பட்டதால் வாரிசை ஈன்று தரும் தாய் என்பதற்காக ஆணின் மதிப்பைப் பெற்றனர்; ஆனால் அதே வேளையில் (ஒரு முரண் நகை போல -irony) அந்தக் காரணத்திற்காகவே அவனால் பாலியல் சீண்டல்களுக்கும், வன்முறைகளுக்கும் இலக்காகி - அவனது உடைமைப் பொருளாகவும், அவனால் துய்க்கப்பெறும் போகப் பொருளாகவும் தரம் தாழ்ந்தனர்.உடற்கூற்று அடிப்படையிலான இயற்கையான வேறுபாடுகள் (biological discriminations ), சூழலடிப்படையில் திணிக்கப்படும் பாலின வேறுபாடுகள் (gender discriminations) என்ற இரண்டையும் வேறுபடுத்திக் காண இயலாத அளவுக்குச் சமூகம் செய்து வைத்திருக்கும் மூளைச் சலவையால் குழப்பமுற்றுத் தாழ்வு மனப்பான்மையில் அழுந்திப் போயினர்.தாங்கள் மென்மையானவர்களென்றும் , பாதுகாப்புக்கு உட்பட வேண்டியவர்களென்றும் ,சார்புநிலைக்கு மட்டுமே உரியவர்களென்றும் முத்திரை குத்தப்பட்டு விட்டதால் தங்கள் வாழ்வும் ,தங்கள் உடலும். தங்கள் வாழ்க்கை முடிவுகளும் தங்கள் கைகளில் இல்லாமல் பிறரால் இயக்கப்படும் சூத்திரப் பாவைகளாயினர். தங்களது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கும் உரிய வடிகால்கள் இன்றித் தாங்களும் மனிதப் பிறவிகள்தான் என்பதையே ஒரு காலகட்டத்தில் மறந்து போயினர்.“

என்ற உண்மையின்படி பெண்கள் இயந்திரங்களாகிப்போன நிலையையும், அவற்றிலிருந்து மீட்சி பெறும் வண்ணம் சமூகம் மாற்றம்பெறவேண்டும் என்பதும், அப்போதே

பால்வேறுபாடற்ற சமத்துவச் சமூகம் உருவாகக்கூடும் என்பதுமான பெண்ணியத்தின் அடிப்படை இலக்குகளை இக்கவிதையில்காணமுடிகின்றது.

**சந்திரவதனா** என்ற பெண்கவிஞரின் **“வழக்கம்போல் அடுப்படிக்குள்…“(சந்திரவதனா,பக்-122-123)** என்னும் கவிதை இயந்திரமாய்ப் போனப் பெண்வாழ்வை, இன்றும் மாறா அவளின் போர்களை, **“ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை சமூகத்தால் பெண்ணாக மாற்றப்படுகிறார்“ (த.விசயலட்சுமி,ப-56)** எனும் பெண்ணாக்கப்படும் உத்திக்குள் அகப்பட்டு அவலமே வழக்கம்போல் வாழ்க்கையாகிப்போன சூழலைப் பதிவு செய்கிறது.

**“எப்போதும் போலவே**
**இன்றைய எனது காலையும்**
**அவசரமாய்த்தான் விடிந்தது.**
**இப்போதெல்லாம்**
**இனிய கனவுகள் என்பது**
**எல்லோருக்கும்போல்**
**எனக்கும்**
**இரவுகளில் வருவதில்லை“**

என்பது தினந்தோறும் தொடரும் அவசர வாழ்க்கையையும் பிறர் தன்னால் பலர் இனிய கனவுகள் காண, அவர்களுக்காக வாழும் தனக்கோ அவ்வாய்ப்பில்லாது போனதெனச் சுட்டுவதோடு

**“வானிலே பறக்கும் விமானங்கள்**
**நேரிலே மோதுவதாய்**
**ஏதேதோ கனவுகள்**
**தீப்பிழம்புக் குவியலுக்குள்**
**நான் நின்று தவிப்பதாய்“**

கூறுவதும், திடுக்கிட்டு தினமும் விழிப்பதே தனக்கானதே என்பதும் உளவியல் பார்வை கொண்டு காணவேண்டியது. அடைந்த அவலங்கள் ஆழ்மனத்தில் இருத்தப்பட்டதால் உருவான தொடர்பில்லாத தீய கனவுகளும் திடுக்கிட்டு உண்டாகும் விழிப்புகளுமாக உறக்கமில்லாமல் போகும் பெண்ணின் இரவுகளை அடையாளம் காட்டுகின்றது இக்கவிதை. “எல்லா கனவுகளும் பொருள் பொதிந்தவை என்கிறார் சிக்மண்ட ஃபிராய்டு. **(Freud Sigmund(1953)' An outline of Psychoanalysis. London. Hogart)** உள்ளத்து உணர்வுகளின் உந்துதலினாலேயே கனவுகள் பிறக்கின்றன. அது அவலமாக வெளிப்படுவதன் காரணம் நனவிலி மனதின் கட்டுக்கடங்காத வேட்கைகள் கனவில் வெளிப்படுகிறது. இதனால் கனவுகள் ஒழுங்கீனமானவையாகவும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத காட்சிகள் கொண்டவையாகவும் அமைந்தபோதிலும் அவை அர்த்தமுடையதாகவும் பொருள் பொதிந்தவையாகவும் காணப்படுகிறது.“(தி.கு.இரவிச்சந்திரன்,ஆய்வுச்சுருக்கம்) என்று கனவுகளைப் பகுப்பாய்வு செய்த பிராய்டு கூறியதைப்போல இங்கு பகல்பொழுதின் பல்வேறு அடக்குமுறைகள், ஓயாத உழைப்பு, அமுக்கப்பட்ட அவளது சுதந்திரவெளி விமானமோதலும் தீப்பிழம்புக்குள்

தவிப்பதுமான அவளது அவல வாழ்வே கனவுகளாய்த் தோன்றுவதாக உளவியல் சார்ந்து பதிவு செய்யப்பட்டுள்ளது..

**"விடியல்கள் என்னவோ வழமை போலத்தான்"** எனும்போது தினந்தோறும் மாறாத அவள் வாழ்க்கைப் பயணத்தைத்தான் உணரமுடிகின்றது.

**"இன்று என்ன சமையல்**
**என்பதில் தொடங்கி**
**கூட்டல் கழுவல்**
**துடைத்தல் பெருக்கல்**
**எல்லாம் முடித்து…**
**வேலைக்கு ஓட வேண்டுமென்பதில்**
**மனசு பரபரத்தது"**

என வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் உரியதான அவளது மாறா நியதிகளை எடுத்துரைக்க, சமூகமோ தான் உருவாக்கிய கட்டமைப்புக்குள் பெண்ணின் நிலைப்பாடு எத்தகையது என்று போடும் முரண்பட்ட கணக்கை,

**"இத்தனைக்கும் நடுவே…**
**அகப்பையும் கையுமாய்**
**அடுப்படியை வலம் வருவதும்**
**படுக்கை விரிப்பதுவும் தான்**
**பெண்ணுக்கு வரைவிலக்கணம்**
**என்ற நினைப்பை**
**கொழுத்தி எறிந்தவள் மாலதி…**
**பெண்பெருமை பாடியது வானொலி"**

என்ற உலகியல் பார்வையைச் சுட்டி பெண்ணுக்குரிய வரைவிலக்கணம் காலம் காலமாய் வகுக்கப்பட்டிருப்பதும் அதைக் கொழுத்தி எறிவதென்பது பேச்சளவில் மட்டுமே என எடுத்துரைத்தும் தொடர்ந்து,

**"எனக்குள்**
**மின்னலாய் கோடிட்டது மகிழ்ச்சி**
**நானே**
**களத்தில் நிற்பது போன்ற திருப்தியுடன்**
**மாலதியின் நினைப்பை மனதில் இருத்தி**
**பத்திரிகையில் வந்த கவிதை படித்து**
**ஒரு மிடுக்கோடு நிமிர…**
**என்னப்பா இண்டைக்குச் சாப்பாடு…?**
**பேப்பரும் கையுமா**
**நீ இருந்தால்…!**
**எனக்குப் பசிக்குது…**
**கடுப்போடு என் கணவன்**
**சிடுசிடுக்க**
**மிடுக்கும்போய்**

**மாலதியின் நினைப்பும் போய்**
**அகப்பையும் கையுமாய்**
**அடுப்படிக்குள் நான்**
**வழக்கம்போல்…"**

எனும்போது பெண்ணுக்குக் கல்வி கற்க உரிமையுண்டு. பட்டங்கள் பெறலாம். சட்டங்கள் செய்யலாம். பொருளாதார வலிமை பெறலாம். ஆனால் இது யாருக்கென்பதே வினாவிற்குரியதாகிறது. அவளுக்கா? அவளைச் சார்ந்த பிறருக்கா? எந்த உரிமையும் இல்லா சூழலிலும் தன்னிரக்கப் போராட்டம். எல்லாம் சட்டமாக்கப்பட்டும் அதே போராட்டம் "பெண் சுதந்திரம் கல்வியும், பணிபுரிவதுமா? என்ற வினா எழுப்பினால் இக்கவிதை அதற்கு தரும் விடை ஒன்றே. **"களம் மாறுகிறது. ஆனால் போர்கள் மாறவில்லை"** என்கிறது.

நகரப்பெண்கள் வாழ்க்கை மட்டுமல்லாமல் ஊரகப்பகுதிகளில் வாழ்க்கையோ அதனையும் தாண்டி இருப்பதையும் பெண்மொழி பதிவு செய்கிறது. பாலினப் பாகுபாட்டிற்குள் சிக்கி உயர்த்த குரலின்றி ஒடுங்கிப்போன சூழலில் அப்பெண்களின் அயராத உழைப்பினையும் மாறாத அடிமை வாழ்வையும் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுவந்து தன்பெண்நிலை வாதத்தைத் தொடங்குகிறர் இளம்பிறை.

**"என்நாக்கு**
**எனக்காக மட்டும்**
**பேசமுடியாதபடி**
**கட்டுப்பட்டுள்ளதால்**
**என் அலறல்கள்**
**எனக்குள்ளேயே**
**அடங்கிப்போகின்றன"(இளம்பிறை,ப-44)**

எனத் தனக்காக வாழவும் முடியாமல், தன் உணர்வுகளை வெளிப்படுத்தமுடியாமல், வரையறுக்கப்பட்டச் சமூகக் கட்டமைப்பினை எதிர்த்துப் போராட இயலாமல், அடிமைத்தனத்தை உள்வாங்கிக்கொள்ளும் பெண்களின் சார்பாய்க் கலகக்குரல் எழுப்பும் பிரதிநிதியாக தன்னை முன்னிறுத்தும் இளம்பிறை ஊரகச் சூழலில் பெண்ணுக்கான அவலத்தை மண்வாசனையோடு பதிவிடுகிறார்.

**"அல்லுபகல் உழைப்பவள்**
**அடிக்ககைய நீட்டாதயா…!**
**சீக்கிரமா சமச்சித் தாரேன்**
**சிடுசிடுன்னு பேசாதய்யா…**
**……**
**உங்களுக்கு முன்னெழுந்து**
**உழைப்பவள வையாதய்யா**
**……**
**புள்ளகுட்டி போதுமுன்னு**

பண்ணிக்கிட்ட ஆபரேசன்-கதுர
அள்ளிப்போட்டு தூக்கயில
முள்ளுபோல குத்துதய்யா
மூச்சுவிடத் திணறுதயா…
காலையில போகயில
கஞ்சிதண்ணி குடிச்சானோ…
பள்ளிக்கூடம் போனமகன்
பத்திரமா இருப்பானோ
கண்ணான அவன எண்ணி
கண்ணும் தண்ணி வடிக்குதயா
களத்துல கட்டுடைத் துடச்சி
கச்சிதமா நெல் உதிர்த்து
காத்து வரும் நேரம் பார்த்து
தூத்தி முடிக்குமுன்னே…
கண்ணுல விழுந்த தூச
நின்னெடுக்க நேரமேது-அட
ஒன்னுக்கு இருக்கக்கூட
ஒழியுதில்ல நேரமய்யா
கொட்டி குமிஞ்ச நெல்லில்
கொடுத்த கூலி வாங்கிகிட்டு
குறுகலான வரப்புவழி
கூலி நெல்லத் தூக்கிக்கிட்டு
எட்டி அடி வச்சும்…
எட்டுமணி ஆச்சுதய்யா…
பச்சவிறகு பத்த நேரமாகுதய்யா…
கண்ணு கலங்குதய்யா..
கைநீட்ட நியாயமுண்டா?
உழைச்சதால உனக்கு மட்டும்
உடம்புவலி தாங்கலேனு
ஊத்திகிட்டு சாராயத்த…
அல்லுபகல் உழைப்பவள
அடிக்ககை நீட்டாதயா…"(இளம்பிறை,பக்-45-46)

எனும் இக்கவிதை வரிகள் ஆணாதிக்கச் சமூகம் நோக்கி வீசும் அக்கினிச் சொற்களாகும். கடுமையான உழைப்பிருந்தும், பாலின அடிப்படையிலான பொருளாதார வேறுபாடு, இயற்கையாகிய அடிப்படைத் தேவைகளுக்குக் கூட வழியின்றிப்போன சூழல், குடும்பக்கட்டுப்பாடு பெண்ணுக்கே உரித்தாக்கப்பட்ட நிலை, பிள்ளை வளர்ப்பு பெண்களுக்கே என்ற வரையறைகளின் உருவாக்கத்தில் தாய்மையின் பரிதவிப்பு, களத்துமேட்டில் மட்டுமல்லாமல் தொடரும் குடும்பத்திற்கான உடல் உழைப்பு, இவ்வாறிருப்பவளே பெண் என்ற சமூகப்பார்வை, தன்னலம் கருதி தன் துணைநலம் கருதாது அதிகாரமிக்கவராகக்

கருதிக்கொண்டு அளிக்கப்படும் உடல்ரீதியான வன்கொடுமைகள் என இக்கவிதை எடுத்துரைக்கும் வாழ்வியல் சமூகத்தைத் தட்டியெழுப்பும் பெண்நிலைவாதமெனலாம்.

இவ்வாறு இருவேறுபட்டப் பாதையில் பயணிப்பவர்களெனினும் பெண்களுக்கான பொது வரைவிலக்கணம், அவள் மீதான சமூகக் கட்டமைப்பு காலத்திற்கேற்றவாறு அடிமைத்தனத்தைப் பிரயோகித்துக் கொண்டிருப்பதை இக்கவிதைகள் அடையாளப்படுத்துகின்றன. பெண்சுதந்திரம் என்பது பேச்சளவிலே என்பதும் அவளை அன்பு, பண்பு, பாசம் என்ற பெண்ணாக்கல் தத்துவங்களுக்கு உரியவளாக்கி அப்பெண்ணே அவ்வரையறைகளைத் தனதாக வரித்துக் கொள்ளும்படியும் செய்துவிடுகிறது. அவள் தன்னைத்தானே உழைப்பவளாக, பிறருக்காக வாழவேண்டியவளாகத், தனக்குத்தானே இரங்குபவளாகத், தன் அலறல்களைத் தனக்குள்ளே கட்டுப்படுத்துபவளாக இச்சமூகம் உருவாக்கிக் கொண்டிருப்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன.

இதில் எங்கு இப்பெண் ஆணுக்கு நிகரான உரிமையை இச்சமூகம் கொடுத்தது என்ற வினாவையும், ஆணாதிக்கமும் பெண்ணுக்கென வரையறுக்கப்பட்ட கற்பிதங்களை மாற்றிக் கொண்ட சமூகமா இன்று நாம் காணுவது என்ற வினாவையும் எழுப்பாமலில்லை. சங்ககாலம் தொட்டு இன்றைக்காலம்வரை தன்னிரக்கக்கவிதைகள் மாறாதிருப்பது, பெண்நிலை வாதங்கள் தோன்றுவது பெண்ணுக்கான களம் மாறியும் மாறா போர்களையே சுட்டுகின்றன. இத்தகைய களங்களையும் போர்களையும் பெண்மொழிகளே அறிவிக்க இயலும். விடுதலை வேண்டும் இப்பெண்மொழியே சமூக மனசாட்சியைத் தூண்டி மாற்றம் தரவைக்கும் ஆயுதமாகும். இதுகாறும் பெண் இழந்த உரிமைகளை சமூகத்திற்கு இனம்காட்டவும், சமதர்மம் நோக்கிய விழிப்புணர்வை உண்டாக்கவும் மொழியால் மட்டுமே இயலும் என்பதால் பெண்கவிஞர்கள் பெண்ணியம் உணர்த்த, இப்பெண்மொழிக்கவிதைகளைக் கைக்கொண்டுள்ளனர்.

## முடிவுரை

"சமூக அடிப்படையிலும் பாலின அடிப்படையிலும் இரட்டைச்சுமையை சுமக்கும் பெண்களுக்கு நகாசு வேலைகள் அதிகம் செய்யத் தேவையற்ற இயல்பாக ஈர்ப்பை உருவாக்குகிற கவிதை வடிவமே இலகுவாக உள்ளது"(ச.விசயலட்சுமி) என்பதற்கிணங்க கவிதைகள் வழி மொழியை ஆயுதமாய்க் கொண்டு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதலை எதிர்த்தும், பிறருக்குரியவளாகவே சித்தரிக்கப்படும் மனப்பான்மையை மாற்ற வலியுறுத்தியும் சமூகத்தில் பெண் தனித்துவமிக்கவளாக விளங்கவேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கின்றன இக்கவிதைகள்

**"பெரும்பாலும்**
**தனக்குள்ளாகவே வசிக்க**
**நேரும் நானும் என் மொழியும்**
**சற்று கடுமையாகவே வெளிப்படக்கூடும்**
**என்றைக்கேனும்..." (சல்மா,இணையத்தரவு)**

என்பதற்கேற்ப கவிதையுலகில் தோன்றிவரும் இப்பெண்மொழிக்கவிதைகள் காலத்தின் தேவையாகும்.

## References

Ajith.P.S. (2009) 'Sari pathi pengal samamanavargal thana?,Bharathi puthagalayam
Annithamasu (2004), Sanga kala penmai, Meyyapan pathipagam.
Aranga.Malliga (2009), Tamil ilakiyamum penmaum, New cuntuty book house
Ganesalingan (2001), Pennadimai theera,Kumaran Publications
Krushangini (2011), Parathal athan suthanthiram.Kavya pathipagam
Murugesa pandiyan (2016), Atrai thingal avvennilavil-Sanga pen kavignargal muthal andal varai, New century book house
Prema, R., (2014), Viduthalai vendinum,Kavya pathipagam.
Salma (2011), Oru malaum innoru malaum,Kala suvadu pathipagam
Suseela, M.A., (2006), Tamililakiya veliyil penmozhium pennum, Meenatchi puthaga nilayam.
Vijayalakshmi, S., (2007), Peruvelipenn, Mithra Arts Creations
Vijayalakshmi, S., (2011), Penneluthu, Bharathi Puthagalayam
Ravichandran, T., (2005) Freud Sigmund(1953)'An outline of Psychoanalysis.London.Hogart

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License



*சந்திரவதனா(1959) ஈழத்தில் மேலைப்புலோலியூர், ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1986 இலிருந்து தனது குடும்பத்துடன் யேர்மனியில் வாழ்ந்து வருகிறார். 1975 இலிருந்து எழுதிக் கொண்டிருக்கும் இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணைய இதழ்கள் எனப் பல தளங்களிலும் வெளிவந்திருக்கின்றன. இது இவரது ஆறாவது நூல்.*

*இவரது மற்றைய நூல்கள்: மனஓசை (2007, சிறுகதைகள்), அலையும் மனமும் வதியும் புலமும் (2019, பத்திகள்), நாளைய பெண்கள் சுயமாக வாழ (2019, கட்டுரைகள்), யார் மனதில் யார் இருப்பார்..! (2024, சிறுகதைகள்), என்னப்பா.. இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ? (2024, பெண்மனசு).*

*தொகுத்த/பதிப்பித்த நூல்கள்: தீட்சண்யம் (2009, கவிதைகள்), தொப்புள் கொடி (2009, நாவல்), மூனாவின் நெஞ்சில் நின்றவை (2019, சிறுகதைகள்), மறந்து போக மறுக்கும் மனசு (2019, சிறுகதைகள்), மூனாவின் கிறுக்கல்கள் (2019, ஓவியம்), பெருநினைவின் சிறு துளிகள்2020, (நினைவுகள்), நெடுஞ்சுடர்: மானுடத்தின் நேசகியாய் வாழ்ந்து நிறைந்த ஒரு தாயின் வாழ்வும் வரலாறும் (2023, வரலாறு), புதனும் புதிரும் (2024, கதைகள்), கருத்துப்படம் (2024, ஓவியம்).*

*தொடர்புகளுக்கு: chandra1200@gmail.com*
*இணையத்தளம்: https://manaosai.com/*

பெண் விடுதலை, பெண் போராளிகளின் மேன்மை, சமூகத்தில் தீர்க்கப்படாமலிருக்கும் சீதனம் போன்ற ஆணாதிக்கச் சின்னங்கள், போர்க்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாதுகாப்பு ரீதியிலான பிரச்சினைகள், காதல் போன்ற தனி மனித உணர்வுகள்... என்று பல்வேறு விடயங்களைக் கருப்பொருட்களாகக் கொண்டது சந்திரவதனா செல்வகுமாரனின் இக் கவிதைத்தொகுப்பு.

சந்திரவதனா புகலிடத் தமிழ் இலக்கியத்தில் நன்கறியப் பட்ட பெண் ஆளுமைகளில் ஒருவர். எளிமையான, இதயத்தை இழுத்துப் பிடிக்கும் மொழி நடை இவரது முக்கிய பலம்.

இவரது கவிதைகளின் அடிநாதமாய் இருப்பது அவை வெளிப்படுத்தும் உணர்வுகள். கவிதைகள் அனைத்துமே இவரது உண்மை உணர்வுகளின் வெளிப்பாடுகளாக இருப்பதால் படிக்கையில் நெஞ்சைத் தொடுகின்றன!

**-வ.ந.கிரிதரன்**

*manaosai.com*
*ISBN: 978-3-981300-24-6*